# கிறிஸ்தவம்

## வினாவிடைப் பூங்கா

- திருவிவிலியம்.
- பழைய ஏற்பாடு.
- புதிய ஏற்பாடு.
- திருச்சபையும் இலங்கைத் திருச்சபையும்.
- வழிபாடும் மறைக் கோட்பாடுகளும்.

(தரம் 5 –12 வரையான மாணவர்களுக்கு உகந்தது)
புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது

தொகுப்பு:– இரா.ரமணன் B.A.(Cey)
ஆசிரியர்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

குறிப்பு: திருவிவிலிய பொது மொழிபெயர்ப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது

1000 வினாவிடைகளைக் கொண்டது.

உள்ளன. கிறிஸ்தவ வினாவிடைப் புதையலில் காணப்பட்ட தவறுகளை சுட்டிக் காட்டிய ஆசிரியர்களுக்கு எனது நன்றிகள். இப் பூங்காவை மேற்பார்வை செய்து ஆலோசனை வழங்கிய மறையாசிரியர் திரு. பங்கிராஸ் அவர்களுக்கும் எனது நன்றிகள். மேலும் பூங்காவை மேற்பார்வை செய்து உதவிய ஆசிரியர்களுக்கும், அருட்தந்தையர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும், எனது நன்றிகள்.

இந்நூலை மேற்பார்வை செய்து வெளியிடுவதற்கு அனுமதி அளித்த மறைக் கல்வி மறைக் கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்தந்தை ஜோண். மவுலிஸ் அடிகளாருக்கும் எனது நன்றிகள். என் உரையை நிறைவு செய்யு முன் எனது பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும், இப் புத்தகத்தை வெளியிட எனக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த எனது அன்பு மனைவிக்கும், நண்பர்களான G.F. கனிசியஸ்ராஜ், A.E. ஜெபர்சன் ஆகியோருக்கும் எனது பாசமிகு நன்றிகள். இந்நூலை மிகவும் அழகான முறையில் கணனி ஒழுங்காக்கம் செய்து தந்தவர்களுக்கும், இந்நூலை சிறப்பாக வெளிக் கொணர்வதில் ஈடுபட்ட பிள்ளையார் அச்சகத்தார்களுக்கும் எனது நன்றிகள்.

நிறைவாக எனது உயர்வுக்காக பாடசாலையில் அறிவு புகட்டிய ஆசிரியர்களையும் அறிவுத் தேடலுக்கு வழிகாட்டிய அருட்தந்தையர்களையும் மானசீகமாகப் போற்றுவதுடன் என்னை உருவாக்கிய புனித பத்திரியர் கல்லூரிக்கும் சிரந்தாழ்த்துகிறேன்.

இரா.ரமணன்
ஆசிரியர்
புனித பத்திரிசிரியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.

2003 ஜனவரி 07.

# திருவிவிலியம்

01. கிறிஸ்தவர்களுடைய புனிதமான நூல் எது?
திருவிவிலியம்

02. உலகில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் நூல் எது?
திருவிவிலியம்.

03. திருவிவிலியத்தின் முதல் நூல் எது?
தொடக்க நூல் (ஆதியாகமம்)

04. திருவிவிலியத்தின் இறுதி நூல் எது?
திருவெளிப்பாடு

05. பழைய ஏற்பாட்டில் முதல் 5 நூல்களும் எவ்வாறு அழைக்கப்பட்டன?
பஞ்சாகமம் (ஐந்து நூல்)

06. திருவிவிலியத்தின் மையப்பொருள் எது?
இறையரசு (விண்ணரசு)

07. யூதர்கள் பழைய ஏற்பாட்டை மூன்றாக வகைப்படுத்தினர்.அவை எவை?
☆ சட்டம் ☆ இறைவாக்கினர் ☆ இலக்கியங்கள்

08. மாற்கு நற்செய்தி எப்போது உருவானது?
கி.பி (64-65) இடைப்பட்ட காலத்தில் உருவானது.

09. திருவெளிப்பாட்டு நூலின் ஆசிரியர் யார்?
யோவான்

10. எத்தனையாம் ஆண்டளவில் எபிரேய அகராதி கண்டு பிடிக்கப்பட்டது?
கி.மு.1300-1200 ஆண்டளவில்

11. கும்ரான் ஏட்டுச்சுருள்கள் எத்தனையாம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது?
1947ம் ஆண்டு

12. கத்தோலிக்க முறைப்படி பழைய ஏற்பாட்டு நூல்கள் எத்தனை?
46 நூல்கள்

13. யூத முறைப்படி சட்ட நூல்கள் எத்தனை? அவை எவை?
5 நூல்கள்:- ★ தொடக்க நூல் ★ விடுதலைப்பயணம் ★லேவியர் ஆகமம் ★ எண்ணாகமம் ★ இணைச்சட்டம்.

14. "தோரா" என்றால் என்ன?
சட்ட நூல்கள்

15. 70 பேர் இணைந்து மொழிபெயர்ப்புச் செய்த பழைய ஏற்பாட்டு கிரேக்க மொழி பெயர்ப்பு யாது?
செப்துவாஜின்ட்

16. ஜெருசலேம் ஆலய அழிவு நினைவு நாளில் வாசிக்கப்படும் திருநூலின் பகுதி எது?
புலம்பல் திருநூல்

17. பழைய ஏற்பாட்டில் எத்தனை மரபுகள் உள்ளன? அவை எவை?
4 மரபுகள் ★ யாவே மரபு ★ இணைச்சட்ட மரபு ★எலோகிம் மரபு ★குருக்கள் மரபு

18. திருவிவிலியம் முதன் முதலில் எவற்றில் எழுதப்பட்டது?
★தோல் ★பாப்பிரஸ் புல் ★கல் ★செங்கல் போன்றவற்றில் எழுதப்பட்டது.

19. பழைய ஏற்பாட்டில் பெரும்பகுதி எம்மொழிகளில் எழுதப்பட்டது?
எபிரேயம்

20. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு நூலின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?
73

21. திருவிவிலியம் தமிழில் முதன் முதலில் எப்போது வெளிவந்தது?
★புதிய ஏற்பாடு -1857 இல்
★பழைய எற்பாடு -1904 இல்

22. மத்தேயு நற்செய்தி எழுதப்பட்ட காலம் எது?
கி.பி (70-80) இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.

23. திருவிவிலியம் எப்போது யாருடைய காலத்தில் முதன் முதலில் எழுத்து வடிவம் பெற்றது?
சாலமோன் அரசன் காலத்தில் கி.மு.950 இல் எழுத்து வடிவம் பெற்றது.

24. திருவிவிலியம் கிறிஸ்தவர்களான எமக்கு சிறப்புமிக்கதாக அமைவதற்கு காரணம் யாது?
இறைவனின் வார்த்தையைக் கொண்டுள்ளமையால்

25. திருவிலிலியத்தின் இரு பெரும் பிரிவுகள் எவை?
☆ பழைய ஏற்பாடு
☆ புதிய ஏற்பாடு

26. திருவிவிலியம் எப்போது யாரால் அதிகாரங்களாகவும், வசனங்களாகவும் பிரிக்கப்பபட்டது?
அதிகாரங்களாகப் பிரித்தவர்:- காண்டர்பரி பேராயர்
- ஸ்டீபன் லாங்டன்
வசனங்களாகப் பிரித்தவர் :- பிரான் அச்சு வல்லுனர்
- கிராபர்ட் ஸ்டீபன்

27. நற்செய்தி என்பதன் கிரேக்கச் சொல் என்ன?
எயுஅங்கேலியோன்

28. ஆரம்பத்தில் நற்செய்தி எவ்வாறு கற்பிக்கப்பட்டது?
வாய் மொழியாக

29. புதிய ஏற்பாட்டு நூல்கள் முதலில் எந்த மொழியில் எழுதப்பட்டன?
கிரேக்க மொழியில்

30. லூக்கா நற்செய்தி எழுதப்பட்ட காலம் எது?
கி.பி (70-80) இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது.

31. கத்தோலிக்கர் மட்டில் பழைய ஏற்பாட்டின் பிரிவுகள் எவை?
☆சட்டம் ☆ஞானாகமங்கள்
☆வரலாற்று நூல்கள் ☆ இறைவாக்கினர்கள்

32. நற்செய்திகளுக்கு வழங்கக்கூடிய சிறப்புப் பெயர்கள் எவை?
☆மீட்புச் செய்தி ☆விண்ணகச் செய்தி

33. புதிய ஏற்பாட்டிலுள்ள மொத்த நூல்கள் எத்தனை அதை அட்டவணைப்படுத்திக் காட்டுக?

| | | |
|---|---|---|
| நற்செய்திகள் | - | 4 |
| திருத்தூதர் பணிகள் | - | 1 |
| திருமுகங்கள் | - | 21 |
| திருவெளிப்பாடு | - | 1 |
| மொத்தம் | | 27 நூல்கள் |

34. நான்கு வடிவ நற்செய்திகளின் பெயர்களைத் தந்து அவற்றின் அடையாளங்களையும் தருக?

| நற்செய்திகள் | அடையாளங்கள் |
|---|---|
| மத்தேயு | மனிதன் |
| மாற்கு | சிங்கம் |
| லூக்கா | எருது |
| யோவான் | கழுகு |

# பழைய ஏற்பாடு

## தொடக்க நூல்

35. திருவிவிலியத்தில் முதல் பெற்றோர் எனக் குறிப்பிடப்படுபவர் யாவர்?
★ஆதாம், ★ஏவாள் (தொ.நூ.2:24)

36. இறைவன் மனிதனுக்கு கொடுத்த சிறப்பான நிலை எது?
கடவுளுடைய சாயலாகப் படைக்கப்பட்டனர்.

37. திருவிவிலியத்தில் படைப்பு பற்றிய முதலாம் வரலாற்றில் எத்தனை நாட்களில் கடவுள் உலகைப் படைத்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது?
6 நாட்கள்

38. படைப்புகளில் மட்டில் மனிதனின் பொறுப்பு யாது?
படைப்பைப் பாதுகாத்து விருத்தி செய்தல்

39. இறைவன் உலகப் படைப்பில் எதை முதன் முதல் படைத்தார்?
ஒளி (தொ.நூ:3)

40. இறைவனின் ஞானத்தை எடுத்தியம்புவது எது?
உலகப் படைப்பு

41. கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட இனம் எது?
இஸ்ராயேல் இனம்

42. ஆதிப்பெற்றோர் முதன் முதலில் உடுத்திய உடை எவற்றால் ஆனது?
அத்திமர இலை (தொ.நூ.3:7)

43. ஆதாம் தம் மனைவிக்கு இட்ட பெயர் என்ன?
ஏவாள் (தொ.நூ.3:20)

44. ஆதாம் ஏவாளை ஏமாற்றி கனியை உண்ணும்படி கூறியது எது?
சர்ப்பம் (பாம்பு) (தொ.நூ.3:4)

45. ஏவாள் பெற்றெடுத்த முதல் இரு மகன்களின் பெயர் என்ன?
☆ காயின் ☆ ஆபேல் (தொ.நூ.4:2)

46. கடவுள் தாம் படைத்த ஆதிப் பெற்றோரை எங்கு வாழும்படி பணித்தார்?
ஏதென் தோட்டத்தில்

47. ஆதிப்பெற்றோருக்கு இறைவன் அளித்த மாபெரும் கொடை எது?
அருளுயிர்

48. காயின் ஆபேல் இவர்களில் யாருடைய காணிக்கையை ஆண்டவர் ஏற்றுக் கொண்டார்? அது என்ன?
ஆபேலின் காணிக்கையான கொழுத்த தலையீறுகளை ஏற்றுக்கொண்டார். (தொ.நூ.4:4)

49. காயின் ஆபேலை கொன்றதால் அவனுடைய இடத்திற்கு கடவுள் யாரைத் தந்தருளினார்?
சேத்துவை (தொ.நூ.4:25)

50. ஆதாம் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?
தொள்ளாயிரத்து முப்பது ஆண்டுகள் (தொ.நூ.5:5)

51. நோவா செய்த பேழையின் நீளம், அகலம், உயரம் எவ்வளவு?
☆நீளம் - முந்நூறு முழம்
☆அகலம் - ஐம்பது முழம்
☆உயரம் - முப்பது முழம்

52. நோவா வாழ்ந்த ஆண்டுகள் எத்தனை?
தொள்ளாயிரத்து ஐம்பது (தொ.நூ.9:29)

53. நோவா காலத்து வெள்ளப்பெருக்கு எதற்கு முன் அடையாளம்?
திருமுழுக்கு எனும் அருட்சாதனத்திற்கு

54. இறைவன் நோவாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக விளங்குவது எது?
வானவில் (தொ.நூ.9:11)

55. வெள்ளப் பெருக்கின் முடிவில் நோவாவின் பேழை தங்கிய இடம் எது?
அரராத்து மலைத் தொடர் (தொ.நூ.8:4)

56. பெரு வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்பட்ட நீதிமானின் பெயர் என்ன?
நோவா (தொ.நூ.7:1)

57. வெள்ளப்பெருக்கின் போது தொடர்ந்து எத்தனை நாட்கள் மழை பெய்தது?
40 நாட்கள் (தொ.நூ.7:11)

58. தெரிந்து கொள்ளப்பட்ட இனத்தின் தந்தை யார்?
ஆபிரகாம்

59. "ஆபிராம்" எத்தனையாவது வயதில் "ஆபிரகாம்" என்ற பெயரைப் பெற்றார்?
99 வயதில் (தொ.நூ.17:5)

60. இறைவன் ஆபிகாமிற்கு எத்தனை வயதில் வாக்குறுதி கொடுத்தார்?
75 வயதில் (தொ.நூ.12:11)

61. கடவுள் ஆபிரகாமை சோதிப்பதற்கு உட்படுத்திய போது ஆபிரகாம் என்ன சொன்னார்?
அடியேன் தயார்

62. ஆபிரகாம் இறைவன் அழைக்க முன்பு வாழ்ந்த இடம் எது?
ஊர் (தொ.நூ.11:27)

63. ஆபிரகாமின் தந்தை யார்?
தெராகு

64. விசுவாசத்தின் தந்தை எனப்படுபவர் யார்?
ஆபிரகாம்

65. இறைவன் ஆபிரகாமை எந்த நாட்டிற்குப் போகும்படி கட்டளை இட்டார்?
கானான் (தொ.நூ.12:1)

66. ஆபிரகாமிற்கு இறைவன் கொடுத்த வாக்குறுதிகள் எவை?
☆வளம் கொளிக்கும் நாடு ☆நிறைவான மக்கட் பேறு
☆இறைவனின் ஆசீர் (தொ.நூ.12:1)

67. ஆண்டவரின் அருள் வாக்கின் படி "ஆபிரகாம்,சாராள்" இவர்களுக்கு மகனாகப் பிறந்தவன் யார்?
ஈசாக் (தொ.நூ.21:3)

68. ஆபிரகாம் கட்டிய முதல் பலிபீடம் எங்குள்ளது?
செக்கேம் எனும் இடத்தில் (தொ.நூ.12:6)

69. ஆபிரகாம் தன் சகோதரி என்று யாரைச் சொன்னார்?
சாராய் என்பவளை (தொ.நூ.12:13)

70. ஆபிரகாம், லோத்து பிரிந்த இடம் எது?
யோர்தான் (தொ.நூ.13:11)

71. கடவுள் ஆபிரகாம், சாராயி இவர்களின் பெயரை எவ்வாறு மாற்றினார்?
☆ஆபிரகாம், ☆சாரா என மாற்றினார்.(தொ.நூ.17:5,15)

72. உடன்படிக்கையின் அடையாளமாக ஆபிரகாமுக்கு கடவுள் செய்யச் சொன்னது எது?
விருத்த சேதனம் (தொ.நூ.17:11)

73. ஆபிரகாம் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?
நூற்றெழுபத்தைந்து ஆண்டுகள் (தொ.நூ.25.7)

74. ஆபிரகாமும் சாராவும் அடக்கம் செய்யப்பட்ட இடம் எது?
எப்ரோனுடைய நிலத்தில் இருந்த மக்பேலா குகையில்
(தொ.நூ.25:9,10)

75. இஸ்ராயேலரின் முன்னோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
குலமுதுவர்கள்

76. இஸ்ராயேலரின் கோத்திரங்கள் எத்தனை?
12

77. குலமுதுவர்களின் தொழில் என்ன?
ஆடு, மாடு மேய்த்தல்.

78. இஸ்ராயலரிடையே இறை வழிபாடுகளை நடத்தும் கோத்திரத்தினர் யாவர்?
லேவி கோத்திரத்தினர்

79. இஸ்ராயேலரின் புனித நகரம் எது?
ஜெருசலேம்

80. இஸ்ராயேல் இனத்தாருக்கு எகிப்தில் வாழ செழிப்பான எந்தப் பிரதேசம் கிடைத்தது?
கோசேன்

81. இஸ்ராயேல் குல வரலாறு யாரில் ஆரம்பமாகிறது?
ஆபிரகாமில் (தொ.நூ.12)

82. இறைவனை 'எலோகிம்' என அழைக்கும் பாரம்பரியம் எது?
எலோகிம் மரபு

83. பூமியெங்கும் மொழிக்குழப்பம் ஏற்பட்டமை எவ்வாறு அழைக்கப்படும்?
"பாபேல்" (தொ.நூ.11:9)

84. திருவிவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள மிகப்பழமையான மரபு எது?
யாவே மரபு

85. ஆண்டவர் எந்த இரு நகரங்களின் பாவம் கொடியது என எண்ணி அழிக்க விரும்பினார்?
★சோதோம் ★கொமோரா (தொ.நூ.18:20)

86. தலைமைத்துவத்தை ஏற்ற குலமுதுவர்கள் செய்த செயல்கள் எவை?
★ தமக்கு கிடைத்த தேவ அழைத்தலை ஏற்றுக் கொண்டார்கள்.
★இடையர்களாகிய தம் தொழிலை பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுத்தார்கள்.
★மக்களிடையே ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தார்கள்.
★"அல்சடாயி" எனப்படும் ஒரே இறைவனை பற்றி கற்பித்தார்கள்.

87. அரசர் பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படும் பகுதி யாது?
சாவே பள்ளத்தாக்கு (தொ.நூ.14:17)

88. பிதாப் பிதாக்கள் (ஆதிப்பிதாக்கள்) யாவர்?
★ஆபிரகாம், ★ஈசாக், ★யாக்கோபு, ★யோசேப்பு

89. ஈசாக்கின் புதல்வர்கள் யாவர்?
★யாக்கோபு, ★எசாயு

90. ஈசாக்கின் ஆசிரைப் பெற்றவன் யார்?
யாக்கோபு (தொ.நூ.27:29)

91. ஈசாக்கிற்கு பிறந்த மயிர் செறிந்த தோலை உடையவன் யார்?
எசாயு (தொ.நூ.27:11)

92. யாக்கோபு ராகேலை மணந்துகொள்ள எத்தனை ஆண்டுகள் வேலை செய்து வந்தான்?
ஏழு ஆண்டுகள் (தொ.நூ.29:18)

93."நீ கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றி கொண்டாய்" என்று கூறி கடவுள் யாக்கோபுக்கு இட்டபெயர் யாது?
இஸ்ராயேல் (தொ.நூ.32:28)

94. 'இஸ்ராயேல்' என்பதன் பொருள் யாது?
இறைவனோடு போராடுபவர் (தொ.நூ.:.32:28)

95. யாக்கோபு தமக்கென்று ஒரு வீடும் மந்தைகளுக்கு குடில்களும் அமைத்து அந்த இடத்திற்கு என்ன பெயரிட்டார்?
'சுக்கோத்து' (தொ.நூ.33:17)

96. "நான் கடவுளின் முகத்தை நேரில் கண்டு உயிர் தப்பிப் பிழைத்தேன்" என்று சொல்லி அந்த இடத்திற்கு யாக்கோபு என்ன பெயரிட்டார்?
பெனியேல் (தொ.நூ.32:30)

97. யாக்கோபு தம் சகோதரனை எத்தனை முறை தரையில் வீழ்ந்து வணங்கினார்?
ஏழுமுறை (தொ.நூ.33:3)

98. யாக்கோபு யோசேப்புக்கு எப்படிப்பட்ட அங்கியை செய்து கொடுத்தார்?
அழகு வேலைப்பாடுகள் நிறைந்த அங்கியை (தொ.நூ.37:12)

99. யாக்கோபுவோடு எகிப்தில் குடியேறிய அவரது புதல்வர்களின் பெயர்களைத் தருக?
★ரூபன் ★சிமியோன் ★லேவி ★யூதா
★சாபுலோன் ★பெஞ்சமின் ★இசக்கார் ★தான்
★நெப்தலி ★காத் ★ஆசேர்.
(தொ.நூ.29 அதிகாரம் 30 வரை)

100. யாக்கோபுவிற்கு எத்தனை பிள்ளைகள்?
பன்னிரண்டு

101. யாக்கோபு 'லூசா' என அழைக்கப்பட்ட இடத்திற்கு என்ன பெயரிட்டார்?
பெத்தல் (தொ.நூ.28:19)

102. தன் சகோதரனின் காலைப் பிடித்துக் கொண்டு உடனுக்குடன் வெளிப்பட்டவர் யார்?
யாக்கோபு (தொ.நூ.25:26)

103. யாக்கோபுவிடம் பெஞ்சமின் உயிருக்கு பொறுப்பு ஏற்றுக் கொண்டவன் யார்?
யூதா

104. யாக்கோபுவின் புதல்வர்கள் எகிப்துக்கு கொண்டு சென்ற பொருட்கள் எவை?
★வெள்ளைப் போளம், ★தேவதாருக்கொட்டைகள்
(தொ.நூ.43:11)

105. யாக்கோபு எகிப்துக்குப் பயணமாகிப் போகும் வழியில் கடவுளுக்கு பலியை ஒப்புக் கொடுத்த இடம் எது?
பெயேர் செபா (தொ.நூ.46:1)

106. எகிப்தில் தன் சகோதரர்களுடன் யோசேப்பு உண்ணாமல் இருந்தது ஏன்?
எகிப்தியர் எபிரேயரோடு உண்பதில்லை. அப்படி உண்பதை எகிப்தியர் அருவருப்பாகக் கருதினர். (தொ.நூ.43:32)

107. யோசேப்பு கண்ட கனவில் அவரை வணங்கக் கண்ட பதினொரு விண்மீன்களும் யார்?
யோசேப்பின் சகோதரர்கள் (தொ.நூ.37:10)

108. யோசேப்பு தம் சகோதரர்களை எங்கு கண்டார்?
தோத்தானில் (தொ.நூ.37:17)

109. யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பை யாரிடம் எவ்வளவு பணத்திற்கு விற்றனர்?
மிதியான் நாட்டு இஸ்மயேலரிடம் இருபது வெள்ளிக் காசுக்கு. (தொ.நூ.37:28)

110. பார்வோன் கண்ட கனவில் வரும் கொழுத்த ஏழு பசுக்களும், நிறைந்த மணிகளைக் கொண்ட ஏழு கதிர்களின் பொருள் யாது?
ஏழு வளமான ஆண்டுகளைக் குறிக்கும் (தொ.நூ.41:26)

111. பார்வோனின் கனவில் வரும் நலிந்து மெலிந்த ஏழு பசுக்கள், விளையாத ஏழு கதிர்கள் எதைக் குறிக்கின்றது?
பஞ்சம் நிறைந்த ஏழு ஆண்டுகளைக் குறிக்கிறது.
(தொ.நூ.41:27)

112. பஞ்சத்தை தவிர்க்க கொள்முதல் செய்யுமாறு யோசேப்பு எவ்விதம் சேர்த்து வைக்க வேண்டுமெனக் கூறினார்?
விளைச்சலில் ஐந்திலொரு பங்கை (தொ.நூ.41:34)

113. தானியம் வாங்கிக் கொண்டு வர யாக்கோபு ஒருவனை மட்டும் எகிப்துக்கு அனுப்பவில்லை அவன் யார்?
பென்யமின் (தொ.நூ.42:4)

114. இளைய சகோதரனுக்குப் பதிலாக எகிப்தில் இருந்தவன் யார்?
சிமியோன் (தொ.நூ.42:24)

115. தன் சகோதரர்களைப் பார்த்து இதோ அவனது இரத்தம் நம்மிடம் ஈடு கேட்கிறது என்று கூறியது யார்?
ரூபன் (தொ.நூ.42:22)

116. யோசேப்பின் சகோதரர்கள் ஒற்றர்கள் என எண்ணி எத்தனை நாட்கள் காவலில் வைக்கப்பட்டனர்?
மூன்று நாட்கள் (தொ.நூ.47:17)

117. யோசேப்பு வைத்துக் கட்டச் சொன்ன வெள்ளிக் கோப்பை யாருடைய கோணிப்பையில் காணப்பட்டது?
பென்யமின் (தொ.நூ.44:12)

118. யோசேப்பும் யாக்கோபும் சந்தித்த பகுதி எது?
கோசேன் (தொ.நூ.46:11)

119. யோசேப்பு பார்வோன் கட்டளைப்படி கொடுத்த வளமான நிலப்பகுதி எது?
இராம்சேசு (தொ.நூ.47:11)

120. யாக்கோபு எகிப்தில் வாழ்ந்த ஆண்டுகள் எத்தனை?
பதினேழு ஆண்டுகள் (தொ.நூ.47:28)

121. ராகேல் அடக்கம் செய்யப்பட்ட இடம் எது?
எப்ராத் (தொ.நூ.48:7)

122. யோசேப்பை பாழ் கிணற்றில் போடும்படி ஆலோசனை சொன்னவன் யார்?
ரூபன்

123. யாக்கோபுவின் மூத்த புதல்வன் யார்?
ரூபன் (தொ.நூ.29:32)

## விடுதலைப் பயணம்

124. விடுதலைப் பணத்தின் போது இஸ்ராயேல் மக்கள் இறைவனை எங்கு வழிபட்டனர்?
கூடாரத்தில்

125. பாஸ்கா விழாவை யூதர்கள் எப்போது கொண்டாடினார்கள்?
வருடத்தின் முதல் மாதமாகிய நிசான் மாதம் 14 ம் நாள் மாலை வேளையில் (வி.ப.12:6)

126. பாஸ்கா கொண்டாடத் தேவையானவை யாவை?
★புளிப்பற்ற மாவிலான அப்பம் ★செம்மறியாட்டுக் குட்டி
★கசப்பான கீரை ★ஈசோப் கொத்து
★இரத்தம் வைக்க கிண்ணம் (வி.ப 12:21)

127. நபுக்கதனேசார் அரசனின் இராட்சியம் எது?
பபிலோனியா

128. இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து மீட்டுச் சென்றவர் யார்?
மோசே

129. யூதர்களுடைய மூன்று முக்கிய விழாக்களும் எவை?
★பாஸ்கா விழா ★ கூடார விழா ★பெத்தக்கோஸ்து விழா

130. இஸ்ராயேல் மக்களின் விடுதலைப் பயணத்தை கூறும் நூல் எது?
விடுதலைப் பயணம்.

131. இறைவன் குல முதல்வர்களோடு உறவைப் புதுப்பிக்க எடுத்துக் கொண்ட வழி எது?
உடன்படிக்கை

132. "மோசே" என்பதன் பொருள் யாது?
"நீரில் இருந்து நான் இவனை எடுத்தேன்"

133. மோசே இறைவனின் அழைப்பைப் பெற்ற இடம் எது?
ஒரேபு மலையடிவாரம் (வி.ப:3:2)

134. இஸ்ராயல் மக்கள் செலுத்திய பலிமுறைகள் எவை?
★தகனப்பலி ★சமாதானப்பலி ★பாவப்பரிகாரப்பலி

135. இஸ்ராயேல் மக்களுக்கு இறை மனித தொடர்பை ஏற்படுத்த துணையாக இருந்தது எது?
★பத்துக் கட்டளைகள்

136. எவ் உடன்படிக்கையை அன்பின் உடன்படிக்கையாக இயேசு மாற்றினார்?
சீனாய் மலை உடன்படிக்கையை

137. இறைவன் பத்துக் கட்டளையை யாரிடம் கொடுத்தார்?
மோசேயிடம்

138. கானானில் இஸ்ராயேல் மக்கள் யாருடைய தலைமையில் குடியேறினர்?
யோசுவா

139. "யோசுவா" என்பதன் பொருள் யாது?
கடவுள் மீட்கிறார் என்பதாகும்.

140. இஸ்ராயேல் மக்கள் எதன் வழியாக பரிசுத்த மக்களாகவும் அர்ப்பணிக்கப்பட்ட இனமாகவும் தெரிந்தெடுக்கப்பட்டனர்?
சீனாய் உடன்படிக்கை வாயிலாக

141. இஸ்ராயேல் மக்கள் எத்தனை ஆண்டுகள் மன்னாவை உண்டனர்?
40 ஆண்டுகள்

142. இஸ்ராயேல் மக்களுக்கு கடவுள் எங்கு வைத்து மோசேயிடம் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தார்?
சீனாய் மலையில் (வி.ப.19:2)

143. இஸ்ராயேல் மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாடு எது?
கானான்.

144. இஸ்ராயேலரை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்காக இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர் யார்?
மோசே

145. பழைய உடன்படிக்கையில் இறைமக்களின் வாழ்வு எவற்றினால் சீராக்கப்பட்டது?
சீனாய் உடன்படிக்கை மூலம் சீராக்கப்பட்டது.

146. பழைய ஏற்பாட்டில் காணப்படும் சிறப்பு வாய்ந்த சம்பவம் எது?
விடுதலைப் பயணமும் சீனாய்மலை உடன்படிக்கையும்.

147. பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் இறைவனுக்கு செலுத்திய ஆராதனை எது?
பலியிடுதல்

148. இஸ்ராயலர் பார்வோனுக்காக எவ் நகரங்களை கட்டி எழுப்பினார்கள்?
★பித்தோம், ★இராம்சேசு (வி.ப.1:11)

149. யாக்கோபுவோடு எகிப்தில் குடியேறியவர்கள் எத்தனை பேர்?
எழுபது பேர் (வி.ப.1:5)

150. எகிப்திய மன்னன் எபிரேயப் பெண்களுக்கு மருத்துவப் பெண்களாக யாரை நியமித்தான்?
★சிப்ரா ★பூவா போன்றவர்களை நியமித்தான். (வி.ப.1:15)

151. எகிப்திய மன்னன் மருத்துவப் பெண்களுக்கு கொடுத்த கட்டளை என்ன?
ஆண் பிள்ளைகளை எல்லாம் கொன்றுவிடுங்கள் பெண் பிள்ளைகள் என்றால் வாழட்டும் (வி.ப.2:6)

152. மோசே யாரிடமிருந்து தப்பியோடி மிதியான் நாட்டில் குடியிருக்க நேரிட்டது?
பார்வோன் (வி.ப.2:16)

153. மோசே யாரை வெட்டிக்கொன்று மண்ணில் புதைத்தான்?
எகிப்தியனை (வி.ப.2:12)

154. மோசேக்கு ஆண்டவரின் தூதர் எங்கே தோன்றினார்?
ஒரேபு மலையில்

155. இஸ்ராயேலின் தலைமகன் யார்?
ரூபன் (வி.ப.6:28)

156. ஆண்டவர் மோசேக்கு எங்கே திருவாக்கு அருளினார்?
எகிப்து நாட்டில் (வி.ப.6:28)

157. பார்வோன் முன்னிலையில் மோசேயின் கோல் என்னவாக மாறியது?
பாம்பாக மாறியது (வி.ப.7:10)

158. எகிப்தியருக்குச் சொந்தமான மிருகங்கள் எப்படி மடிந்தன?
கொள்ளை நோயில் மடிந்தன (வி.ப.9:3)

159. எகிப்து நாட்டில் தொடர்ந்து எத்தனை நாள் காரிருள் உண்டாகியது?
மூன்று நாட்கள் (வி.ப.9:3)

160. புளிப்பற்ற அப்பங்களை எத்தனை நாட்கள் உண்ணும்படி இஸ்ராயேல் மக்களுக்கு கூறினார்?
ஏழு நாட்கள் (வி.ப.12:15)

161. இஸ்ராயேல் மக்கள் எகிப்தில் குடியிருந்த காலம் எவ்வளவு?
நானூற்று முப்பது ஆண்டுகள் (வி.ப.12:40)

162. ஆண்டவர் எத்தனையாவது நாளை புனிதப்படுத்தினார்?
ஏழாம் நாளை (பி.ப.20:11)

163. ஒரு ஆண்டிற்கு எத்தனை முறை விழா எடுக்குமாறு கடவுள் கட்டளையிட்டார்?
மூன்று முறை (வி.ப.23:14)

164. முப்பெரும் விழாக்கள் எவை?
☆புளிப்பற்ற அப்ப விழா ☆அறுவடை விழா
☆சேகரிப்பு விழா

165. மோசே பன்னிரு கோத்திரங்கள் நினைவாக எவற்றை நாட்டினார்?
பன்னிரண்டு தூண்களை (வி.ப.24:4)

166. மோசே மலையில் எவ்வளவு காலம் தங்கியிருந்தார்?
நாற்பது பகலும் நாற்பது இரவும் தங்கியிருந்தார். (வி.ப.24:24)

167. கடவுள் திருமுன் ஆராத்திப் பலி செய்தது யார்?
ஆரோன் (வி.ப.29:24)

168. பலிபீடத்தில் காலையிலும் மாலையிலும் என்ன பலியிடக் கூறினார்?
செம்மறி ஆட்டுக்குட்டிகளை (வி.ப.29:39)

169. ஆண்டவர் மோசேயிடம் வெண்கலத்தில் என்ன செய்து வைக்க கூறினார்?
வெண்கல நீர்த்தொட்டி (வி.ப.30:17)

170. கடவுள் இஸ்ராயேல் மக்களுக்கு என்ன அறிவிக்க வேண்டும் என்று மோசேயிடம் கூறினார்?
ஓய்வு நாளைக் கருத்தாய் கடைப்பிடிக்கும்படி கூறினார். (வி.ப.31:13)

171. சீனாய் மலையில் கடவுள் மோசேயுடன் பேசி முடிந்த பின் என்ன கொடுத்தார்?
கடவுளின் விரலால் எழுதப்பட்ட கற்பலகைகளான உடன்படிக்கைப் பலகைகள் இரண்டையும் கொடுத்தார்.

172. ஆண்டவர் மோசேயிடம் எவற்றை எடுத்துக்கொண்டு சீனாய் மலைக்கு வருமாறு கூறினார்?
இரு கற்பலகை (வி.ப.34:1)

173. மோசே எத்தனை நாட்கள் உண்ணாமலும் குடியாமலும் இருந்தார்?
நாற்பது நாட்கள் (வி.ப.34:38)

174. மோசே எந்த நாளை ஓய்வு நாள் என்று கூறினார்?
ஏழாம் நாளை (வி.ப.35:2)

175. இஸ்ராயேல் மக்கள் கூடாரத்தை எந்த மரத்தால் செய்தனர்?
சித்திம் மரத்தால் (வி.ப.36:20)

176. மோசே யாரை திருப்பொழிவு செய்தார்?
ஆரோனையும், அவன் புதல்வரையும்

177. மோசேயின் மாமனார் யார்?
இரகுவேல்

178. இஸ்ராயேல் மக்களை வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு இட்டுச் செல்லும் பொறுப்பை நிறைவேற்றியவர் யார்?
யோசுவா

179. மோசேயின் மரணத்தின் பின் இஸ்ராயேல் மக்களின் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?
யோசுவா

180. எகிப்தியர் மேல் கடவுள் விட்ட பத்துக் கொள்ளை நோய்களும் எவை?

★ நைல் நீர் இரத்தமானது
★ மிருகக் கொள்ளை நோய்
★ காரிருள்
★ ஈக்கள் கூட்டம்
★ வெட்டுக்கிளி
★ தவளைகள் பெருக்கம்
★ கல் மழை பொழிந்தது
★ கொப்புளங்கள்
★ கொசுக்கள் கூட்டம்
★ மூத்த ஆண்-பிள்ளைகளைக் கொல்லுதல்

181. பத்துக் கட்டளைகளில் இறைவனைப் பற்றிய கட்டளைகள் எவை?

★ ஒரே சருவேசுரனை முழு மனதுடன் ஆராதிப்பாயாக
★ சருவேசுரனின் திருப்பெயரை வீணாக உச்சரியாதிருப்பாயாக
★ சருவேசுரனின் திருநாட்களை பரிசுத்தமாக அனுசரிக்க மறவாதிருப்பாயாக.

182. பத்துக்கட்டளைகளில் சமூகத்தைப் பற்றிய கட்டளைகள் எவை?

★ பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக.
★ கொலை செய்யாதிருப்பாயாக.
★ மோக பாவம் செய்யாதிருப்பாயாக.
★ களவு செய்யாதிருப்பாயாக.
★ பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக
★ பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக
★ பிறர் உடமையை விரும்பாதிருப்பாயாக.

183. இஸ்ராயேல் மக்கள் ஆண்டவரை மறந்து யாரை வழிபட்டனர்?
பாவாலையும் அஸ்தரோத்தையும்

## இணைச்சட்டம்

184. அரக்கர் நாடு என்று அழைக்கப்பட்ட நாடு எது?
பாசான் நாடு (இ.ச.3:13)

185. ஆண்டவர் எந்த மலையில் இஸ்ராயேல் மக்களோடு உடன்படிக்கை செய்தார்?
ஒரேபு மலையில் (இ.ச.5:2)

186. ஆண்டவர் இஸ்ராயேல் மக்களை எவ்வாறு பெருகச் செய்வதாக கூறினார்?
வானத்து விண்மீன்கள் போல் (இ.ச.10:22)

187. கூடாரத்திருவிழா எத்தனை நாட்கள் கொண்டாடப்படுகின்றது?
ஏழுநாட்கள் (இ.ச.16:13)

188. மோசே எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?
நூற்று இருபது (இ.ச.31.2)

189. மோசே எங்கு இறந்தார்?
நேபா மலையில் உள்ள பிஸ்காவின் உச்சியில்
(இ.ச.34:1)

190. கடவுள் மோசேயை எங்கு அடக்கம் செய்தார்?
பெத்பகோருக்கு எதிரே உள்ள பள்ளத்தாக்கில் (இ.ச.34:6)

191. யோசுவாவின் தந்தை யார்?
நூன் (யோசு.1:1)

192. ஐந்து மன்னர்களின் நாடு எது?
கானான் நாடு (யோசு.13:14)

193. இஸ்ராயலரின் பன்னிரு கோத்திரங்களில் நாடு கொடுக்கப்படாத கோத்திரம் எது?
லேவியர் குலம் (யோசு.13:3)

194. யோசுவா இறந்த போது அவருக்கு எத்தனை வயது?
நூற்றுப்பத்து (யோசு.24:29)

195. தொபோரா இஸ்ராயலருக்கு நீதி வழங்கும் போது எம்மரத்தின் கீழ் அமர்வார்?
பேரீச்சை மரம் (நீ.த.4:5)

196. "மாரா" என்பதன் பொருள் என்ன?
கசப்பு (ரூ1:20)

197. அன்னா கருவுற்று ஒரு மகனைப் பெற்ற போது அவனுக்கு என்ன பெயரிட்டாள்?
சாமுவேல் (சா.நூ.1:20)

198. கோலியாத் எவ் நகரைச் சேர்ந்தவன்?
காத்து நகரை சேர்ந்தவன். (சா.நூ.17:4)

199.தாவீதின் மனைவியின் பெயர் என்ன?
மீக்கால் (சா.நூ.18:27)

200. தாவீது அரச பதவி ஏற்ற போது அவருக்கு எத்தனை வயது?
முப்பது (2 சாமு5:4)

201. ஆண்டவர் நாத்தானை யாரிடம் அனுப்பினார்?
தாவீதிடம் (2 சாமு12:1)

202. தாவீது எத்தனை பேருக்கு சமமாக மதிக்கப்பட்டார்?
பத்தாயிரம் பேருக்கு (2 சாமு18:3)

203. சாலமோன் எவ்வாறு போற்றப்படுகிறார்?
ஞான நூல்கள் அனைத்திற்கும் இவர் ஆசிரியராகப் போற்றப்படுகின்றார்.

204. சாலமோன் தன் அரண்மனை முழுவதையும் கட்டி முடிக்க எத்தனை ஆண்டுகள் சென்றன?
பதின்மூன்று ஆண்டுகள் (1அர 7:1)

205. யோபு எவ்வாறு போற்றப்படுகின்றார்?
தன்னிகரில்லா ஞானி எனப் போற்றப்படுகின்றான்.

206. இஸ்ராயேல் மக்கள் எவ்மலையில் பொற்கன்றுக் குட்டியைச் செய்தனர்?
ஓரேபு மலையில் (தி.பா.106:19)

207. நீதி மொழிகள் நூலின் ஆசிரியர் யார்?
சாலமோன் (நீ.மொ.1:1)

## அரசர்களும் நீதித்தலைவர்களும்.

208. சாலமோன் எப்போது அரசுப் பதவியை ஏற்றுக் கொண்டான்?
கி.மு.962 ல்

209. பெரிய நீதித் தலைவர்கள் யாவர்?
☆ஒத்னியேல் ☆சிம்சோன் ☆ஆவோத் ☆பாராக் ☆தெபோரா
☆கிதியோன் ☆இப்தாகு ☆ஏகூது

210. சிறிய நீதித் தலைவர்கள் யாவர்?
☆யாயீர் ☆சம்கார் ☆தோலா ☆ஏலோன் ☆இப்சான்
☆அப்தோன்

211. "ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கிறேன்" என்று கூறியவர் யார்?
சாமுவேல்

212. சாலமோன் அரசன் இறைவனிடம் கேட்ட வரம் எது?
ஞானம் (1அர3:9)

213. தாவீதின் நண்பன் யார்?
ஜோனத்தன் (1சாமு18:1)

214. தாவீது இறைவனின் பேழையை வைத்திருந்த இடம் எது?
ஜெருசலம்.

215. தாவீது அரனின் காலத்தில் அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த இறைவாக்கினர் யார்?
நாத்தான்.

216. தாவீது அரசனின் பரம்பரை நீடித்து வருவது யாருடைய கோத்திரத்தில் ஆகும்?
யூதா கோத்திரம்.

217. இஸ்ராயேல் நாட்டை ஒற்றுமைப்படுத்திய அரசன் யார்?
தாவீது

218. தாவீது அரசனின் பாட்டியாகும் பாக்கியம் பெற்ற யூதரல்லாத புற இன பெண் யார்?
ரூத்

219. இஸ்ராயேல் மக்கள் மதில்களைத் தகர்த்து வெற்றி கொண்ட நகரம் எது?
ஜெரிக்கோ நகரம்.

220. இஸ்ராயேல் மக்களின் முதல் அரசன் யார்?
சவுல் (சாமு10:21)

221. குருவாக, நீதிபதியாக, இறைவாக்கினராக பணியாற்றியவர் யார்?
சாமுவேல்

222. ஜெருசலம் தேவாலயத்தைக் கட்டிய மன்னன் யார்?
சாலமோன்.

223. தாவீதுக்கு பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவன் யார்?
சாலமோன்.

224. பிலிஸ்தியரின் வீரனான கோலியாத்துடன் போர் புரிந்து முழு நாட்டிற்குமே விடுதலையை பெற்றுக் கொடுத்தவர் யார்?
தாவீது

225. கானான் நாட்டு அதிபதியான யாபீனின் படைகளைத் தோற்கடித்து இஸ்ராயேல் மக்களைக் காக்கும் பொறுப்பு யாரிடம் வழங்கப்பட்டது?
தெபோரா.

226. ஆகாப் அரசனுடைய மனைவி யார்?
ஜெசபேல்.

227. ஆகாப் அரச குடும்பத்தினர் வழிபட்ட தேவதை யார்?
பாகால்

228. தாவீதின் சொந்த ஊர் எது?
பெத்லகேம்.

229. சவுல் எந்த குலத்தைச் சேர்ந்தவர்?
பென்யமீன்

230. சாமுவேலால் அருட்பொழிவு செய்யப்பட்ட அரசர்கள் யாவர்?
✯சவுல் ✯தாவீது

231. தாவீது தன் மரணப்படுக்கையில் அரசனாக்கியது யாரை?
சாலமோனை

232. பன்னாட்டு வாணிகத்தை ஏற்படுத்திய அரசன் யார்?
எரோபவாம்.

233. ஜெருசலேம் தேவாலய மதில்களைக் கட்டியவர் யார்?
நெகேமியா

234. பாரசீகப் பேரரசின் ஆட்சி மொழி எது?
அரமேயம்

235. இரகுவேல் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
மிதியான் நாட்டைச் சேர்ந்தவர். (எ.ஆ.10:29)

236. ஆண்டவரின் நெருப்பு பற்றியெரிந்த இடத்தின் பெயர் என்ன?
தபேரா (எ.ஆ.11:3)

237. மனித பிணத்தை தொடுகிறவன் எத்தனை நாள் தீட்டுப்பட்டிருப்பான்?
ஏழுநாள் (எ.ஆ.19:11)

238. ஞானத்தை ஒருவனுக்கு அளிப்பவர் யார்?
ஆண்டவர் (நீ.மொ.2:6)

239. இஸ்ராயேலர் மிதியானிடம் எத்தனை ஆண்டுகள் துன்புற்றனர்?
ஏழு ஆண்டுகள் (நீ.த.6:1)

240. "கிறிஸ்தவர்கள் மனக்குலத்தின் துரோகிகள்" எனக் கூறி உரோமை நகருக்கு தீ வைத்து விட்டு அப் பழியை கிறிஸ்தவர்கள் மேல் சுமத்தி நகர் எரியும் போது பிடில் வாசித்த மன்னன் யார்?
நீரோ

241. ஆரோன் எங்கு இறந்தான்?
ஓர் என்னும் மலையுச்சியில் (எ.ஆ.20:28)

## இறைவாக்கினர்கள்

242. அடிமைத்தனத்தில் பணிபுரிந்த இறைவாக்கினர்கள் யாவர்?
☆எசயாI, ☆எசயாII, ☆எசேக்கியேல்

243. எசாயா தனது இறைவாக்கில் முன்னறிவித்த ஒரு முக்கிய நபர் யார்?
இம்மானுவேல்

244. தம்முடைய பெயரில் நூல்கள் இல்லாத இறைவாக்கினர்கள் யாவர்?
★நாத்தான், ★அகியா, ★எலியா,
★ எலிசா, ★காத், ★செமயா

245. பபிலோனிய அடிமைத்தனத்திற்குப் பின் பணிபுரிந்த இறைவாக்கினர்கள் யாவர்?
★எசயாIII, ★ஆகாய், ★செக்கரியா, ★மலாக்கி, ★ஒபதியா,
★தானியேல், ★யோனா

246. "எசாயா" என்பதன் பொருள் யாது?
கடவுள் எனது மீட்பர்

247. இஸ்ராயேல் இறைவாக்கினர்களின் சிறப்புப் பெயர்கள் எவை?
★இறைவனின் தூதர்கள் ★சாமக்காவலர்கள்
★இறைவனின்பணியாளர்கள் ★ஆயர்கள்
★காப்பாளர்கள் ★யாவேயின் பிரதிநிதிகள்
★கடவுளின் மனிதர்கள் ★கடவுளின் வாய்
★இஸ்ராயலருக்காக செபிப்பவர்கள்
★கடவுளின் ஊழியர்கள்

248. எசாயா எந்த நாட்டிற்கு எதிராக இறைவாக்கு கூறினார்?
பபிலோனியாவுக்கு எதிராக இறைவனுக்கு கூறினார் (எ.ச.13:1)

249. எரேமியா இறைவாக்கினர் பிறந்த இடம் எது?
அனத்தோத் (எரே1:1)

250. எரேமியா இறைவாக்கினருக்கு யாருடைய காலத்தில் அழைப்பு வந்தது?
யோசியாவின் காலத்தில் (எரே1:2)

251. ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இனம் எது?
இஸ்ராயேல் இனம் (எரே2:3)

252. எரேமியாவிற்கு எத்தனை ஆண்டுகள் ஆண்டவரின் அருள் வா அருளப்பட்டது?
இருபத்து மூன்று ஆண்டுகள் (எரே25:3)

253. "எசேக்கியேல்" என்பதன் பொருள் யாது?
ஆண்டவர் ஆற்றல் அளிப்பார் என்பதாகும்.

254. "தானியேல்" என்பதன் பொருள் யாது?
கடவுள் தீர்ப்பிடுகிறார் என்பதாகும்.

255. ஆமோஸ் இறைவாக்கினர் செய்த தொழில் யாது?
✯கால்நடைவளர்த்தல் ✯ஆடுமாடுமேய்த்தல் (ஆமோ7:14)

256. "ஒசேயா" என்பதன் பொருள் யாது?
யாவே என்னை மீட்கிறார்.

257. ஒசேயா இறைவாக்கினர் காலத்தில் இஸ்ராயேல் மக்கள் வழிபட்ட தெய்வம் எது?
பாகாய்

258. மீக்கா இறைவாக்கினர் பிறந்த ஊர் எது?
மோரசேத்து

259. சூறாவளி மூலம் விண்ணகம் சென்றவர் யார்?
எலியாசு

260. பரிசுத்த ஆவியின் வருகை பற்றி முன்கூட்டியே அறிவித்த இறைவாக்கினர் யார்?
யோவேல்

261."சேனைகளின் ஆண்டவராகிய அரசரை என் கண்களால் கண்டேன்"என்று இறைவாக்குரைத்தவர் யார்?
எசாயா

262. கும்ரான் குகையில் முழுமையாக கண்டுபிடிக்கப்பட்ட நூல் எது?
எசாயா ஆகமம்

263. 'ஜெஸ்ஸேயின் தண்டில் இருந்து ஒரு தளிர் கிளம்பும்'என்று இறைவாக்குரைத்தவர் யார்?
எசாயா

264. "யோசுவா" என்பதன் பொருள் என்ன?
கடவுள் மீட்கிறார் என்பதாகும்.

265. "நாகூம்" என்ற பெயரின் பொருள் என்ன?
யாவே ஆறுதல் அளிக்கிறார் என்பதாகும்.

266. நாகூம் எந்த நகரத்தைப் பற்றி இறைவாக்குரைத்தார்?
நினிவே நகரத்தைப் பற்றி (நா.கூ.1:1)

267. "அபக்கூக்கு" பெயரின் பொருள் என்ன?
கட்டி அணைத்தல், தழுவுதல் என்பதாகும்.

268. அபக்கூக்கு நூலின் மையக்கருத்து யாது?
நேர்மையுடையோர் கடவுள் மீது கொண்டுள்ள நம்பிக்கையினால் வாழ்வார்கள்.

269. "செப்பனியா" என்ற சொல்லுக்கு பொருள் யாது?
யாவே காப்பாற்றுகிறார் என்பதாகும்.

270. "மலாக்கி" என்பதன் பொருள் யாது?
என்தூதன் என்பது பொருள் ஆகும்.

271. வஞ்சனை நிறைந்த ஆன்மாவில் எது நுழைவதில்லை?
ஞானம் (ஞா.நூ.1.4)

272. மனிதரை கடவுளிடம் இருந்து பிரிப்பவை எவை?
நெறிகெட்ட எண்ணெம் (ஞா.நூ.1:3)

273. ஞானத்துடன் உறவு கொள்ளாதது எது?
பொறாமை (ஞா.நூ.6:23)

274. ஞானத்தை மேற்கொள்ளாதது எது?
தீமை (ஞா.நூ.7:30)

275. மதிப்பை உயர்த்துவது எது?
பண்பான பேச்சு (சீ.ஞா6:5)

276. இன்சொல் யாரை பெருகச் செய்யும்?
நண்பர்களை (சீ.ஞா.6:5)

277. தாவீது மன்னனின் குற்றத்தை சுட்டிக் காட்டிய இறைவாக்கினர் யார்?
நாத்தான் (2சாமு.12:1)

278. ஜெருசலேம் ஆலயம் யாருடைய முறைப்படி கட்டப்பட்டது?
கனானேயரின் முறைப்படி கட்டப்பட்டது.

279. 'எரேமியா' என்பதன் பொருள் யாது?
ஆண்டவர் என்னை மேன்மைப்படுத்தினார் என்பதாகும்.

280. "ஆமோஸ்" என்பதன் பொருள் யாது?
ஆண்டவர் என்னை தூக்கிச் சென்றார் என்பதாகும்.

281. "மீக்கா" என்பதன் பொருள் யாது?
ஆண்டவருக்கு நிகர்யார் என்பதாகும்.

282. தென்னாட்டிலே பிறந்து வடநாட்டில் பணி செய்த இறைவாக்கினர் யார்?
ஆமோஸ்

283. பெரிய இறைவாக்கினர்கள் யாவர்?
★எசாயா, ★எரேமியா, ★எசேக்கியேல், ★தானியேல்

284. "நீதியுள்ள தளிரை தாவீதிற்குப் பிறப்பிப்போம்" என்று இறைவாக்குரைத்தவர் யார்?
எரேமியா

285. சமூக நீதியின் இறைவாக்கினர் யார்?
ஆமோஸ்

286. "இம்மானுவேல்" என்பதன் பொருள் யாது?
கடவுள் நம்மோடு என்பதாகும்.

287. "மனிதன் பாவம் செய்து மனம் வருந்தும் போது இறைவன் அவனை மன்னிக்கிறார்" என்று குறிப்பிடும் இறைவாக்கினர் யார்?
யோவேல்

288. கார் மேல் மலையில் செபித்த இறைவாக்கினர் யார்?
எலியா

289. எரிக்கோவின் அழிவைப்பற்றிக் கூறும் நூல் எது?
யோசுவா ஆகமம்

290. திருப்பலியில் முன் குறியாக அப்பம், இரசம் ஒப்புக்கொடுத்தவர் யார்?
மெல்கிசெதேக்

# புதிய ஏற்பாடு

## நற்செய்திகள்

291. இயேசு எங்கே பிறந்தார்?
பெத்லகேமில் (லூக் 2:6)

292. இயேசு எங்கே ஞானஸ்நானம் பெற்றார்?
யோர்தான் நதிக்கரையில் (மத்.3:13)

293. இயேசு யாரிடம் ஞானஸ்நானம் பெற்றார்?
திருமுழுக்கு யோவானிடம் (மத்.3:13)

294. இயேசு எத்தனையாவது வயதில் போதிக்கத் தொடங்கினார்?
முப்பது வயதில் (மத்.3:23)

295. இயேசுவை மோயீசனின் சட்டப்படி சுத்திகரிக்க எங்கே கொண்டு போனார்கள்?
ஜெருசலேமுக்கு (லூக்.2:22)

296. பெயரைப் பதிவு செய்ய யோசேப்பும் மரியாளும் எங்கு சென்றனர்?
பெத்லகேம் (லூக்.2:25)

297. இறைவன் இரக்கத்தின் தந்தை என்பதைக் காட்ட கிறிஸ்து கூறிய உவமை எது?
உதாரிப்பிள்ளை உவமை (லூக்.15:11)

298. 'மெசியா' என்பதன் பொருள் யாது?
அபிஷேகம் செய்யப்பட்டவர்

299. 'ரபி' என்னும் எபிரேயச் சொல்லுக்கு பொருள் யாது?
போதகர் (மத்.23:7)

300. இயேசு செய்த முதல் புதுமை எது?
கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை இரசமாக மாற்றியமை
(யோவா.2:11)

301. பரிசுத்த ஆவியைப் பற்றி இயேசு சுட்டிக்காட்டும் திருவிழா எது?
கூடாரத்திருவிழா

302. 'மக்கபேயு' என்பதன் பொருள் யாது?
சம்மட்டி

303. பரிசேயர்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்?
சடங்குகளுக்கு

304. தூய யோவான் யார் காலத்தில் பத்மூ தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்?
தொமீயேன் காலத்தில்

305. கலிலேயாக் கடலின் மறு பெயர்கள் எவை?
★ கெனசரேத் ஏரி ★ திபேரியாக் கடல்

306. 'யோர்தான்' என்பதன் பொருள் யாது?
இறங்கி வருவது என்பதாகும்.

307. யூதர்களின் சமய வாழ்வின் மையம் எது?
ஜெருசலேம் ஆலயம்

308. வாரங்களின் விழா எப்போது கொண்டாடப்பட்டது?
பாஸ்கு விழாவிலிருந்து 50ம் நாள்.

309. வாரங்களின் விழா என்பதற்கு பிற்காலத்தில் வழங்கிய பெயர் என்ன?
★ அறுவடையின் விழா ★ பெந்தகோஸ்து திருவிழா

310. ஜெருசலேம் ஆலயம் அழிந்த நிலையில் யூதர்களின் வழிபாடு எங்கு நடைபெற்றது?
செபக் கூடங்களில்

311. இன்று நாம் பெந்தகோஸ்து விழாவை எவ்விழாவாக கொண்டாடுகிறோம்?
தூய ஆவியின் விழாவாக

312. இஸ்ராயேலருக்கு வேறு பெயர்கள் யாவை?
★எபிரேயர்கள் ★யூதர்கள்

313. கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் என்று எண்ணியவர்கள் யார்?
யூதர்கள்

314. யூதர்களின் தலைமைச் சங்கத்தின் பெயர் என்ன?
செனத்திரியோன்

315. யூதர்களுக்கு மரணத்தீர்ப்பை யார் வழங்க முடியும்?
உரோமை ஆளுநன் மட்டுமே

316. யூதத் தலைமகனுக்கு வரி எவ்வளவு?
ஸ்தாத்தோர் வெள்ளி (நான்கு திராக்மா)

317. வரி செலுத்த யூத ஆணுக்கு எத்தனை வயது பூர்த்தியாக வேண்டும்?
12 வயது

318. தென்நாட்டு யூதர்களால் தீண்டத்தகாதவர்களாக வெறுக்கப்பட்டு கரிசிம் மலையில் வழிபட்டவர்கள் யார்?
சமாரியர்கள்

319. இயேசுவின் வரலாறு முதலில் எந்த மொழியில் எழுதப்பட்டது?
I. அரமேயம் II. கிரேக்கம்

320. உயிர்ப்பை நம்பாத சாலமோனின் குருவாகிய சாதோக்கின் சந்ததியினர் யார்?
சதுசேயர்கள்

321. யூத மரபுப்படி ஆண் பிள்ளைக்கு விருத்த சேதனம் எத்தனையாவது நாளில் செய்வார்கள்?
8ம் நாள்

322. யூத மரபின் தூய்மைச் சடங்கு ஆண், பெண் குழந்தைகளுக்கு முறையே எத்தனையாவது நாளில் நடைபெறும்?
40ம் நாள், 80ம் நாள்

323. யூதர்கள் எத்தனை வயதிற்குப் பிறகு எருசலேம் ஆலயத்திற்கு கட்டாயம் ஆண் பிள்ளையை அழைத்துச் செல்வர்?
12 வயதுக்குப் பிறகு

324. உரோமையர்களால், கொள்ளைக்காரர்கள் எனப்பட்ட கொலை செய்யவும் தயங்காத சிக்காரி இனத்தைச் சேர்ந்தவர்கள் யார்?
தீவிரவாதிகள்

325. எருசலேம் ஆலயத்தில் பலிப்பொருட்கள் தயாரிப்பு, பாடல்கள் தயாரிப்பு, காணிக்கைப் பொருட்கள் பிரிப்பது, காவலர் போன்ற பணிகளைச் செய்தவர்கள் யார்?
லேவியர்கள்

326. யூதர்கள் அடிமைத் தனத்திலிருந்து தங்களை மீட்க வருவதாக யாரை எதிர்பார்த்தனர்?
மெசியாவை

327. இயேசு பிறந்த பெத்லகேம் ஊர் இப்போது யார் கைவசம் உள்ளது?
இஸ்லாமியர்கள் கைவசம் உள்ளது.

328. திருத்தூதர்கள் நூல்கள் எழுதுவதற்கு பயன்படுத்திய பொருள்கள் யாவை?
☆பாப்பிரஸ்ஓலை, ☆பதனிடப்பட்ட தோல், ☆கல், ☆செங்கல்

329. "கெத்சமனி" என்பதன் பொருள் என்ன?
எண்ணெய் ஆலை என்பதாகும்.

330. 'மத்தேயு' என்பதன் பொருள் என்ன?
"யாவேயின் கொடை" என்பதாகும்

331. மத்தேயு எங்கு மறைசாட்சியாக உயிர்நீத்தார்?
எதியோப்பியாவில் மறைசாட்சியாக உயிர்நீத்தார்.

332. மத்தேயு எந்த நகரின் சுங்கச் சாவடியில் அமர்ந்திருக்கும் போது இயேசு இவரை அழைத்தார்?
கப்பர் நாகூம் என்ற நகரின் சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த போது அழைத்தார்.

333. இயேசுவின் தாய்மொழி யாது?
அரமெயிக்கு

334. ஆபிரகாமிலிருந்து இயேசுவின் தலைமுறை அட்டவணையுடன் தொடங்கும் நற்செய்தியாளர் யார்?
மத்தேயு (மத்.1:1)

335. ஆபிரகாம் முதல் கிறிஸ்துவரை வரும் தலைமுறைகள் எத்தனை?
42 தலைமுறைகள

336. "யோசேப்பே, தாவீதின் மகனே, உம்மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம்" எனக் கூறியது யார்?
ஆண்டவரின் தூதர் (மத்.1:20)

337. "இயேசு" என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
"மீட்பர்" (மத்.1:21)

338. இயேசு எந்த மன்னனுடைய காலத்தில் எங்கே பிறந்தார்?
ஏரோது அரசன் காலத்தில், யூதேயாவிலுள்ள பெத்லகேமில் பிறந்தார் (மத்.2:1)

339. இயேசு பாலனைப் பார்க்க ஜெருசலேமுக்கு வந்த ஞானிகள் யாரிடம் என்ன கேட்டார்கள்?
ஏரோது அரசனிடம், "யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே?" என்று கேட்டனர். (மத்.2:2)

340. ஞானிகள் எவ்வழியாக நாடு திருப்பினர் ஏன்?
ஏரோதிடம் திருப்பிப்போக வேண்டாம் என்று கனவில் அவர்கள் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள். (மத்.2:12)

341. திருமுழுக்குப் பெற்றவுடன் இயேசு தண்ணீரை விட்டு வெளியேறிய போது என்ன அடையாளம் நடைபெற்றது?
கடவுளின் ஆவி, புறா இறங்குவது போலத் தம்மீது இறங்கி வருவதையும் அவர் கண்டார். (மத்.3:16)

342. இயேசுவுக்கு அலகை கொடுத்த சோதனைகள் எத்தனை?
மூன்று (மத்.4:3-11)

343. அலகை இயேசுவைச் சோதிக்கப் பயன்படுத்தி பொருள் யாது?
கற்கள் (மத்.4:3)

344. மலைப் பொழிவில் வரும் பேறுகள் எத்தனை?
எட்டு (மத்.5:3-10)

345. இயேசுவின் மேலுடையின் ஓரத்தைத் தொட்டவர் யார்?
பன்னிரு ஆண்டுகளாய் இரத்தப் போக்கினால் வருந்திய பெண் (மத்.9:20)

346. திருத்தூதர்கள் எத்தனை பேர்?
பன்னிருவர் (மத்.10:1,2)

347. இயேசு திருத்தூதர்களை எங்கு நுழைய வேண்டாம் என்றார்?
சமாரியாவின் நகர் எதிலும் நுழைய வேண்டாம். (மத்.10:5)

348. இயேசு தம் சீடர்களிடம் எவற்றை எடுக்க வேண்டாம் என்று கூறினார்?
★பொன், ★ வெள்ளி, ★செப்புக்காசு, ★பை, ★இரண்டு அங்கிகள், ★மிதியடிகள், ★கைத்தடி (மத்.10:9,10)

349. மத்தேயு குறிப்பிடும் இரு அழிந்த நகரங்கள் யாவை?
★சோதோம், ★கொமோரா (மத்.10:15)

350. திருமுழுக்கு யோவானின் சீடர்கள் இயேசுவிடம் கேட்ட கேள்விகள் யாவை?
"வரவிருப்பவர் நீர் தாமோ அல்லது வேறு ஒருவரை எதிர்பார்க்க வேண்டுமா?" என்று கேட்டார் (மத்.11:3)

351. யோனா மீனின் வயிற்றில் எத்தனை நாள் இருந்தார்?
யோனா மூன்று பகலும், மூன்று இரவும் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தார். (மத்.12:40)

352. சாலமோனின் ஞானத்தைக் கேட்க வந்தவர் யார்?
தென்நாட்டு அரசி (மத்.12:34)

353. மத்தேயு நற்செய்தியில் விண்ணரசை விளக்குவதற்கு இயேசு கூறும் உவமைகள் எத்தனை?
ஆறு உவமைகள் (மத்.13:24-50)

354. இயேசுவின் சொந்த ஊர் எது?
நாசரேத்து (மத்.13:54, 2:23)

355. ஏரோதியாள் யார்? இவள் யாருடைய கொலைக்கு காரணமானாள்?
பிலிப்பின் மனைவி
திருமுழுக்கு யோவானின் கொலைக்கு

356. ஐந்து அப்பம் பருகுதல் நிகழ்வில் எத்தனைபேர் உண்டனர்?
5000 ஆண்கள் (சிறுபிள்ளைகள், பெண்கள் நீங்கலாக)
(மத்.14:20,21)

357. வெளிவேடரைக் குறித்து பொருத்தமாக இறைவாக்குரைத்தவர் யார்?
எசாயா (மத்.15:7)

358. "ஐயா தாவீதின் மகனே எனக்கு இரங்கும்" எனக் கூறிய பெண்மணி யார்?
கனானியப் பெண் (மத்.15:22)

359. "நீங்கள் என்னை யாரென சொல்கிறீர்கள்?" என்று இயேசு கேட்ட போது பேதுரு கூறிய மறுமொழி என்ன?
"நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்" என்று உரைத்தார் (மத்.16:16)

360. உயர்ந்த மலைக்கு இயேசுவோடு சென்ற திருத்தூதர்கள் யாவர்?
☆பேதுரு, ☆யோவான், ☆யாக்கோபு (மத்.17:1)

361. பேய்களை ஓட்ட உதவும் இரு கருவிகள் எவை?
☆ இறைவேண்டல் ☆ நோன்பு (மத்.17:21)

362. இயேசு தம் பாடுகளை எத்தனை முறை முன்னறிவித்தார்?
3 முறை (மத்.16:21, 17:22, 20:7)

363. இயேசு சபித்த மரம் எது?
அத்திமரம் (மத்.21:19)

364. திருச்சட்ட நூலில் தலைசிறந்த கட்டளை எது?
"உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து' என்பதாகும். (மத்.23:27)

365. வெளிவேடக்காரர், குருட்டுவழிகாட்டிகள், வெள்ளை அடித்த கல்லறைகள் யார்?
☆மறைநூல் அறிஞர், ☆பரிசேயர் (மத்.23:16,27)

366. பத்து தோழியர் உவமையில் இருந்து நாம் பெறும் படிப்பினை யாது?
விளக்குகளுடன் கலன்களில் எண்ணெயும் எடுத்துச் சென்ற முன்மதியுடையவர்களைப் போல் இருக்க வேண்டும். (மத்.25:4)

367. பெண் ஒருவர் நறுமணத்தைலம் ஊற்றிய நிகழ்ச்சி எங்கு யாருடைய வீட்டில் நடைபெற்றது?
பெத்தானியாவில் தொழுநோயாளர் சீமோன் வீட்டில் நடைபெற்றது. (மத்.26:6)

368. இயேசு எத்தனையாவது வயதில் அறிஞர்கள் மத்தியில் இருந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்?
12வது வயதில்

369. ஊழியக் குருத்துவம் எப்போது ஆரம்பமாகியது?
பெரிய வியாழனன்று

370. இயேசுவின் இறுதி இராப்போசன விருந்து எப்போது நடந்தது?
பெரிய வியாழன்று

371. இயேசுவிற்கு எதிராகச் சதி செய்ய யூத தலமைச் சங்கத்தை கூட்டிய தலைமைக்குரு யார்?
கயபா (மத்.26:3)

372. முத்தமிடுதல் எவற்றின் அடையாளம்?
அன்பையும் மரியாதையையும் வெளிப்படுத்தும் அடையாளம் (மத்.26:49,50)

373. இயேசுவைக் கைது செய்து முதலில் யாரிடம் கொண்டு சென்றனர்?
தலைமைக்குரு கயபாவிடம் (மத்.26:57)

374. நூற்றுவர் தலைவனின் விசுவாச அறிக்கை யாது?
"இவர் உண்மையாகவே இறைமகன்"

375. "ஏலி, ஏலி லாமா சபக்தானி" என்ற கிரேக்க வார்த்தையின் பொருள் யாது?
"என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்" என்பது பொருளாகும். (மத்இ.27:46)

376. இயேசுவால் உயிர்பெற்ற சிறுமிக்கு எத்தனை வயது?
பன்னிரண்டு வயது (மாற்.5:43)

377. அப்பம் பருகிய நிகழ்ச்சி நடைபெற்ற இடம் எது?
பாலை நிலம் (மாற்.6:35)

378. இயேசு தம் சீடர்களுக்கு இறுதியில் கொடுத்த மூன்று கட்டளைகள் யாவை?
★எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள்
★தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்கு கொடுங்கள்
★நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். (மத்.28:19,20)

379. இயேசு கிறிஸ்து யாரென்று மாற்கு கூறுகின்றார்?
கடவுளின் மகன் என்று கூறுகின்றார் (மாற்.1:1)

380. "தலித்தாகூம்" என்பதன் பொருள் என்ன?
சிறுமி, உனக்குச் சொல்லுகிறேன் எழுந்திரு என்பது பொருள் ஆகும். (மாற்.5:41)

381. "இடியைப் போன்றவர்கள்" என அழைக்கப்படுபவர்கள் யார்?
செபதேயுவின் மகன் யாக்கோபுவும் அவர் சகோதரர் யோவானும் ஆவர். (மாற்.3:17)

382. இயேசுவிடம் வந்து வேண்டிய தொழுகைக்கூடத் தலைவன் யார்?
ஜாயீர் (மாற்.5:22)

383. "கோர்பான்" என்பதன் பொருள் யாது?
கடவுளுக்கு காணிக்கையாயிற்று என்பதாகும் (மாற்.7:11)

384. "பொவனேர்கேசு" என்பதன் பொருள் யாது?
இடியைப் போன்றவர் என்பதாகும்.

385. மாற்கு தன் நற்செய்தியில் எந்த திருத்தூதரைப் பற்றி அதிகம் எழுதியுள்ளார்?
புனித பேதுரு

386. புனித மாற்குவின் உண்மையான பெயர் என்ன? இலத்தீன் பெயர் என்ன?
உண்மையான பெயர் - யோவான்
இலத்தீன் பெயர் - மார்குஸ்

387. மாற்கு நற்செய்தியில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?
16

388. மாற்கு நற்செய்தியில் பரிசேயர், இயேசு மோதல்கள் எத்தனை முறை இடம்பெறுகிறது?
ஐந்து முறை

389. முதன் முதலில் எழுதப்பட்ட நற்செய்தி எது? அது எப்போது எழுதப்பட்டது?
மாற்கு
கி.பி 65ம் ஆண்டு எழுதப்பட்டது.

390. செபதேயுவின் பிள்ளைகள் யார்?
✯யாக்கோபு, ✯யோவான் (மாற்10:35)

391. "குருத்தோலை ஞாயிறு" அன்று இயேசு எதன் மீது பவனி வந்தார்?
கழுதைக் குட்டியின் மீது பவனி வந்தார். (மாற்11:7)

392. ஒருவன் முதல்வனாய் இருக்க என்ன செய்ய வேண்டும் என்று இயேசு கூறுகிறார்?
"அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருகக்கும் தொண்டராகவும் இருக்க வேண்டும்." என்று இயேசு கூறுகிறார். (மாற்9:35)

393. பாஸ்கா விழாவின் போது இயேசுவை ஏன் கைது செய்யாது விட்டனர்?
ஒரு வேளை மக்களிடையே கலகம் ஏற்படக்கூடும் என எண்ணியதால் கைது செய்யாது விட்டனர். (மாற்14:2)

394. புளிப்பற்ற அப்ப விழாவின் போது அதற்கு முதல் நாள் எதைப்பலியாக ஒப்புக் கொடுப்பார்கள்?
வெள்ளாட்டுக்குட்டியை (மாற்14:12)

395. புகழ்பாடல் பாடிவிட்டு இயேசு எந்த மலைக்குச் சென்றார்?
ஒலிவ் மலைக்குச் சென்றார். (மாற் 14:26)

396. இயேசுவிற்குப் பதிலாக விடுதலை செய்யப்பட்ட கைதி யார்?
பரபா (மாற்15:15)

397. இயேசுவை சிலுவையில் அறையும் போது எத்தனை மணி?
காலை ஒன்பது மணி (மாற்.15:25)

398. இயேசுவைக் கைது செய்ய யூதாசுடன் வந்தவர்கள் யார்?
தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர், மூப்பர் ஆகியோர் அடங்கிய மக்கள் கூட்டம் வந்தனர். (மாற்.14:43)

399. இயேசுவுக்குத் தலையில் முள்முடி சூட்டும் போது என்ன சொல்லி வாழ்த்தினர்?
"யூதரின் அரசே வாழ்க" என்று வாழ்த்தினர். (மாற்.15:18)

400. ஆண்டவர் இயேசு விண்ணேற்றமடைந்து எங்கு அமர்ந்தார்?
கடவுளின் வலப்பக்கம் (மாற.16:19)

401. லூக்கா எவ்விடத்தில் பிறந்தார்?
சீரிய நாட்டு அந்தியோக்கியாவில்

402. வானதூதர் செக்கரியாவின் மகனுக்கு என்ன பெயர் வைக்கச் சொன்னார்கள்?
யோவான் (லூக்.1:13)

403. செக்கரியா எழுது பலகையில் என்ன எழுதினார்?
"இக்குழந்தையின் பெயர் யோவான்" என்று எழுதினார். (லூக்.1:63)

404. "மெசியா" என்பதன் சிறப்புப் பெயர் யாது?
விடியல் (லூக்.1:79)

405. திருமுழுக்கு யோவானை சிறையில் அடைத்தவர் யார்?
குறுநில மன்னன் ஏரோது (லூக்.3:19,20)

406. சூசையும் மரியும் தமக்குப் பிறந்த குழந்தைக்கு எத்தனையாம் நாள்? என்ன பெயர் சூட்டினர்?
எட்டாம் நாள்
இயேசு என்று பெயரிட்டனர் (லூக்.2:21)

407. இயேசு பாலைவனத்தில் அலகையினால் எத்தனை நாள் சோதிக்கப்பட்டார்?
நாற்பது நாள் (லூக்.4:2)

408. கப்பர்நகூம் ஊரில் இயேசு யாரைக் குணமாக்கினார்?
தீய ஆவியான பேய் பிடித்தவனை குணமாக்கினார் (லூக்.4:35)

409. பேய்கள் இயேசுவை எவ்வாறு அழைத்தன?
நீர் இறைமகன் என அழைத்தன. (லூக்.4:47)

410. மரத்தை அறிவது எதனால்?
அதன் கனியால் (லூக்.6:44)

411. "ஆண்டவரே நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்" என இயேசுவிடம் மன்றாடியவர் யார்?
தொழுநோயாளி (லூக்.5:12)

412. "மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு" என இயேசு யாரிடம் கூறினார்?
மறைநூல் அறிஞரிடமும் பரிசேயரிடமும் கூறினார்.

413. "எழுந்து நடுவே நில்லும்" என்று இயேசு யாரைப் பார்த்துக் கூறினார்?
கை சூம்பியவரை நோக்கி கூறினார். (லூக்.6:8)

414. இயேசு பிடிபடுவதற்கு முன் தான் செபிக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்ற அப்போஸ்தலர்கள் யாவர்?
★பேதுரு, ★யாக்கோபு, ★யோவான் (மாற்.14:23)

415. இயேசு தாம் தேர்ந்தெடுத்தவர்களுக்கு என்ன பெயரிட்டார்?
திருத்தூதர் (லூக்.6:14)

416 யாருக்கு ஆசி கூற வேண்டும்?
உங்களை சபிப்போருக்கு (லூக்.6:28)

417. வரையறுக்கப்படாத அன்பு காட்டும் நமது நண்பன் யார்?
இயேசுகிறிஸ்து

418. இயேசுவின் அன்புச்சீடர் யாவர்?
பேருது, யாக்கோபு, யோவான்

419. இயேசு தான் பிடிபடுவதற்கு முன் செபிக்க எங்கே சென்றார்?
கெஸ்தமனித் தோட்டத்திற்கு (லூக்.22:39)

420. யூதத் தலைமைச் சங்கம் இயேசுவுக்கு கூறிய தீர்ப்பு யாது?
இவன் சாகவேண்டியவன். (மத்.26:66)

421. இயேசுவின் அப்போஸ்தலர்கள் பன்னிருவரின் பெயர்களைத் தருக?
★பேதுரு ★யூதாததேயு ★யோவான் ★அந்திரேயா
★யாக்கோபு ★பர்த்தலமேயு ★மத்தேயு ★அல்பேயுவின், மகன் யாக்கோபு ★தோமா ★தீவிரவாதியான சீமோன்
★பிலிப்பு, ★யூதாஸ் ஸ்கரியோத்து (லூக்.6:14)

422. யோவான் நற்செய்தியில் இயேசு யாரை "பொய்யின் தந்தை" எனக் குறிப்பிடுகின்றார்?
சாத்தானை

423. மலைப்பொழிவு இடம்பெறும் இரு நற்செய்திகளும் எவை?
★லூக்காஸ், ★மத்தேயு

424. இறையரசைப் பற்றிய உவமைகள் எவை?
★திருமணவிருந்து ★திராட்சைக்கொடி ★புதையல்
★வலை ★கடுகுவிதை ★ஆட்டுப்பட்டி
★முத்துக்கள்

425. இறை தந்தை இயேசுவை எவ்வாறு வெளிப்படுத்தினார்?
"என் அன்பார்ந்த மகன் நீயே உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" என்று வெளிப்படுத்தினார் (மாற்.3:17)

426. இயேசு அப்போஸ்தலர்களுக்கு கொடுத்த அதிகாரங்கள் எவை?
★பேய்களை ஓட்டுதல் ★நோயாளரை குணமாக்குதல்
★இறையரசைப் போதித்தல் போன்றவையாகும்.

427. "பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்களுக்குப் போடுவது முறையல்ல" என்று கூறியவர் யார்?
இயேசு கிறிஸ்து

428. இறைவனின் அரசு வரும்படி நாம் செபிக்கும் செபம் எது?
கர்த்தர் கற்பித்த செபம் (பரலோக மந்திரம்)

429. வேதாகமத்தில் "நேர்மையானவர்" என்று அழைக்கப்படுபவர் யார்?
புனித யோசேப்பு

430. கீழ்படிதலுக்கு சிறந்த முன் மாதிரியாக விளங்கியவர் யார்?
இயேசு கிறிஸ்து

431. இயேசு கிறிஸ்து தமது பணியை இவ்வுலகில் தொடர்ந்து செய்ய
யாரை அனுப்பினார்?
அப்போஸ்தலர்களை

432. இறையரசின் உவமைகளை அதிகளவு எழுதிய நற்செய்தியாளர்
யார்?
மத்தேயு

433. "கடவுளின் மக்கள்" என அழைக்கப்படுபவர் யார்?
அமைதி ஏற்படுத்துவோர் (மத்.5:9)

434. "நீங்கள் குழந்தைகளாக மாறாது விட்டால் விண்ணரசில் நுழைய
மாட்டீர்கள்" என்று போதித்தவர் யார்?
இயேசு கிறிஸ்து

435. தூய ஆவி எந்த வடிவில் வந்திறங்கினார்?
புறா வடிவில். (லூக்.3:22)

436. நெறி தவறியோரை மீட்க வந்தவர் யார்?
மானிட மகன் (மத்.18:11)

437. பல்கிப் பெருகிய அப்பத்தை அனைவரும் வயிறார உண்டபின்
எஞ்சியதை எத்தனை கூடை நிறைய எடுத்தனர்?
பன்னிரண்டு (லூக்.9:17)

438. இயேசுவை "கடவுளின் மகன் மெசியா" என்று கூறியவர் யார்?
பேதுரு (லூக்.9:20)

439. "இயேசுவின் பெயரால் பேய் ஓட்டுவதைத் தடுத்தோம்" என்று
கூறியவர் யார்?
யோவான் (லூக்.9:49)

440. நல்ல சமாரியன் உவமை யாருடைய கேள்விக்காகச்
சொல்லப்பட்டது?
திருச்சட்ட அறிஞர் (லூக்.10:25)

441. இயேசுவின் காலடியில் அமர்ந்து வார்த்தையை கேட்டுக் கொண்டிருந்த பெண் யார்?
மரியா (லூக்.11:39)

442. நினிவே மக்களுக்கு அடையாளமாய் இருப்பவர் யார்?
யோனா (லூக்.11:30)

443. இயேசு யாரை பேறுபெற்றவர்கள் என்கிறார்?
காணாமலே நம்புவோரை (லூக்.20:29)

444. சாதி, மத, குல, கோத்திர பேதம் பாராது ஒன்றுபட்டு ஒரே மனத்தினராய் வாழ வேண்டும் என்பதற்கு இயேசு கூறிய உவமை எது?
நல்ல சமாரியன் உவமை

445. இயேசு கை கழுவாமல் உண்பதை பார்த்து வியப்படைந்தவர் யார்?
பரிசேயர் (லூக்.11:38)

446. பலிபீடத்துக்கும் தூயகத்துக்கும் நடுவே இறந்தவர் யார்?
சக்கரியா (லூக்.11:50)

447. நரி என்று இயேசு யாரைக் குறிப்பிடுகிறார்?
ஏரோதுவை (லூக்.13:32)

448. நீர்க்கோவை நோயை எந்த நாளில் இயேசு குணமாக்கினார்?
ஓய்வு நாளில்

449. ஊதாரிப் பிள்ளையின் உவமையில் எந்த மகன் சொத்தை பிரித்துத் தர வேண்டினான்?
இளைய மகன் (லூக்.15:12)

450. யோசேப்பு எந்த வழி மரபினர்?
தாவீதின் வழி மரபினர். (லூக் 2:4)

451. இளைய மகன் திரும்பி வந்ததும் அவனுக்கு அணிவிக்கப்பட்ட அணிகலன்கள் யாவை?
மிதியடி, மோதிரம் (லூக்.15:22)

452. மனிதர்கள் முன் நேர்மையாளராகக் காட்டிக் கொள்பவர்கள் யார்?
பரிசேயர் (லூக்.16:15)

453. செல்வந்தருடைய வீட்டு வாசலருகே விழுந்து கிடந்த ஏழை யார்?
இலாசர் (லூக்.16:20)

454. இறந்த இலாசரை வானதூதர்கள் யாரின் அருகில் வைத்தனர்?
ஆபிரகாமின் மடியில் (லூக்.16:22)

455. தொழுநோயாளிகள் இயேசுவிடம் வேண்டியது என்ன?
ஐயா இயேசுவே எங்களுக்கு இரங்கும். (லூக்.17:13)

456. "இறையாட்சி எப்போது வரும்" என்று இயேசுவைக் கேட்டது யார்?
பரிசேயர் (லூக்.17:20)

457. வாரத்திற்கு இருமுறை நோன்பிருப்பவன் யார்?
பரிசேயன் (லூக்.18:12)

458. தலைவர் ஒருவர் இயேசுவிடம் கேட்டது யாது?
நிலை வாழ்வு (லூக்.18:18)

459. இயேசு பார்வையற்ற ஒருவரை குணமாக்கிய ஊர் எது?
எரிக்கோ (லூக்.18:35)

460. எரிக்கோவில் இயேசு சந்தித்த பெரிய செல்வந்தர் யார்?
சக்கேயு (லூக்.19:2)

461. சக்கேயு குறித்து இயேசு கூறியது என்ன?
இவரும் ஆபிரகாமின் மகனே (லூக்.19:10)

462. உயிர்த்தெழுதல் இல்லையென்று கூறுபவர்கள் யார்?
சதுசேயர் (லூக்.20:27)

463. கைம் பெண்ணின் காணிக்கை எவ்வளவு?
இரண்டு காசுகள்

464. "கல்லின் மேல் கல் இராதபடி இடிபடும்" என்று கூறிய ஆலயம் எது?
ஜெருசலேம் ஆலயம் (லுக்.21:6)

465. தேவ புண்ணியங்களில் தலை சிறந்தது எது?
அன்பு

466. பாஸ்கா விருந்துண்ண ஏற்பாடு செய்யும்படி இயேசு யாரை அனுப்பினார்?
பேதுரு, யோவான் (லூக்.23:3)

467. 'நீ யூதரின் அரசனா' என்று இயேசுவைக் கேட்டது யார்?
பிலாத்து (லூக்.23:3)

468. அரிமத்தேயா ஊரைச் சேர்ந்த தலைமைச் சங்க உறுப்பினர் யார்?
யோசேப்பு (லூக்.23:50)

469. இயேசு விண்ணேற்றம் அடைந்த இடம் எது?
பெத்தானியா (லூக்.24:50)

470. திருமுழுக்கு யோவானின் ஊர் எது?
கலிலேயா

471. ஒளியைக் குறித்து சான்று கூற வந்தவர் யார்?
திருமுழுக்கு யோவான் (யோவா 1:6)

472. உண்மையான ஒளி எது?
வார்த்தை (யோவா 1:9)

473. யோவான் எங்கே திருமுழுக்கு கொடுத்தார்?
அயினோனில் (யோவா 3:23)

474. சீமோன் பேதுருவின் சகோதரர் யார்?
அந்திரேயா (யோவா 1:40)

475. அத்திமரத்தின் கீழ் இயேசு யாரைக் கண்டார்?
நத்தனியேல். (யோவா 1:48)

476. விண்ணரசு யாருக்கு உரியது?
ஏழையரின் உள்ளத்தோர்க்கு. (மத். 5:3)

477. இயேசு இரண்டாவது அரும் அடையாளத்தை எங்கு செய்தார்?
கலிலேயாவில் செய்தார்

478. யூதேயாவில் இயேசு ஏன் நடமாடவில்லை ?
இயேசுவை யூதர்கள் கொல்ல வழி தேடியதால் யூதேவில் நடமாடவில்லை. (யோவா.7:1)

479. கூடாரத் திருவிழா ஆங்கில மாதங்களில் எப்போது கொண்டாடப்படுகிறது?
செப்ரெம்பர், ஒக்டோபர் மாதங்களில் (யோவா 7:2)

480. "சிலோவாம்" என்றால் என்ன?
அனுப்பட்டவர் என்பதாகும். (யோவா 9:7)

481. இயேசு பார்வையற்றவரை என்றைக்கு குணமாக்கினார்?
ஓர் ஓய்வு நாளில் குணமாக்கினார் (லுக் 9:14)

482, யோவன் நற்செய்தியில் அதிக வசனம் உள்ள அதிகாரம் எது? எத்தனை வசனங்கள்?
6ம் அதிகாரம், இறைவார்த்தைகள் 71

483. இயேசுவின் புதிய கட்டளை எது ?
ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். (லூக் 13:34)

484. யோவான் நற்செய்தி நானே வெளிப்பாடுகள் எத்தனை முறை வருகிறது ?
7 முறை

485. பிலிப்பு ஆண்டவரிடம் கேட்டது என்ன?
"ஆண்டவரே தந்தையை எங்களுக்குக் காட்டும் அதுவே போதும்" என்றார்.

486. இயேசு அறிவிலும் ஞானத்திலும் நாள் தோறும் வளர்ச்சி அடைந்து வந்தாரென குறிப்பிடும் நற்செய்தியாளர் யார்?
லூக்கா

487. இறைவன் மன்னிக்கும் தந்தை என்பதைக் காட்ட கிறிஸ்து கூறிய உவமை எது?
ஊதாரிப் பிள்ளை உவமை

488. இயேசுவைக் காட்டிக் கொடுக்கும் முறை பற்றி யூதாஸ் ஸ்கரியோத் யாருடன் ஆலோசனை நடத்தினான்?
தலைமைக் குருக்களுடனும் காவல் தலைவனுடனும் (லூக்22:4)

489. "நீர் நெடுஞ்சான் கிடையாக விழுந்து என்னை வணங்கினால் இவை அனைத்தையும் உமக்குத் தருவேன்" இவ்வாறு இயேசுவைப் பார்த்துக் கூறியது எது?
அலகை (சாத்தான்) (மத்4:9)

490. எங்கே செல்வத்தை பூச்சியும் துருவும் அழித்து விடும் என்றார் இயேசு?
மண்ணுலகில்

491. ஊழியர்கள் யாருக்குப் பணிவிடை செய்ய முடியாது?
இரு தலைவர்களுக்கு (மத்6:24)

492. என்னை நோக்கி "ஆண்டவரே ஆண்டவரே" எனச் சொல்பவரெல்லாம் எங்குசெல்வதில்லை என இயேசு கூறுகின்றார்?
விண்ணரசுக்குள் (மத்7:21)

493. இயேசு யாருடைய கையைத் தொட்டதும் அவரது காய்ச்சல் நீங்கியது?
பேதுருவின் மாமியார் (மத் 8:15)

494. இயேசு எத்தனை நாட்கள் நோன்பிருந்தார்?
நாற்பது நாட்கள்

495. இயேசு யாரால் காட்டிக் கொடுக்கப்பட்டார்?
யூதாஸ் ஸ்கரியோத்துவினால் (லூக் 22:48)

496. பாவங்களை மன்னிப்பது தொடர்பாக கர்த்தர் கற்பித்த செபத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள பகுதி எது?
எங்களுக்குத் தீமை செய்பவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்.

497. இயேசுவை சிலுவையில் அறைய யூதர்கள் எங்கு கொண்டு சென்றனர்?
மண்டையோடு என அழைக்கப்படும் கொல்கொத்தா

498. இயேசுவோடு சிலுவை சுமக்கும் படி கட்டளைப்படுத்தப்பட்ட வழிப்போக்கரின் பெயர் என்ன?
சீரனே ஊரனாகிய சீமோன் (லூக்23:26)

499. இயேசு இறக்கும் முன்னர் படைவீரர்கள் அவருக்கு செய்த நிந்தனைகள் எவை?
☆ முள் முடியை தலையில் சூடினார்கள்
☆ பிரம்பால் தலையில் அடித்தார்கள்.
☆ அவர் மேல் துப்பினார்கள்.
☆ முழந்தாளிட்டு வணங்கி ஏளனம் செய்தார்கள்.
☆ வெள்ளைப் போளம் கலந்த புளித்த இரசத்தைக் குடிக்க கொடுத்தனர்.

500. இயேசு இறை தந்தையை நோக்கி எவ்வாறு செபித்தார்?
"அப்பா தந்தாய்" என்று செபித்தார். (லூக் 22:42)

501. இயேசு எந்த மலையில் பலியானார்?
கல்வாரி மலையில்

502. இயேசு உயிர்த்த பின் முதன் முதல் யாருக்குக் காட்சி கொடுத்தார்?
மகதலா மரியாளுக்கு (யோவா 20:18)

503. ஒருவன் இயேசுவின் பணியாளன் ஆவதற்கு தேவையான பண்புகள் எவை?
☆ பரித்தியாகம் ☆ நம்பிக்கை ☆ உண்மையுடமை
☆ இறைசித்தத்தை ஏற்றுக்கொள்ளுதல்
☆ எத்தகைய சமூகத்திலும் தன்னை அர்ப்பனித்து, பணிபுரியும் மனப்பாங்கு என்பன அவசியம்.

504. மனுமகன் மீண்டும் வரும் போது வானில் தோன்றும் அறிகுறிகள் எவை?
☆ கதிரவன் இருண்டு விடுவான்
☆ நிலா ஒளி தொடர்ந்து ஒளிர்ந்து கொண்டிருக்கும்.
☆ விண்மீன்கள் வானிலிருந்து விழுந்து கொண்டிருக்கும்.
☆ வானகத்தின் படைகள் அசைக்கப்படும்.

505. திருமுழுக்கு யோவானின் பெற்றோர் யார்?
சக்கிரியா, எலிசபேத்தம்மாள் (லூக்1:14)

506. பாவிப் பெண் கிறிஸ்துவிடம் மன்னிப்பை பெற்றுக் கொண்டது யாருடைய வீட்டில்?
சீமோனின் வீட்டில்

507. புனித லூக்காசின் கூற்றுப்படி இயேசுவால் முதலில் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர் யார்?
பேதுரு (லூக்5:11)

508. தூய ஆவியின் மூவித செயற்பாடுகளும் எவை?
☆பேச்சு, ☆செயல், ☆ எழுத்து

509. மத்தேயு நற்செய்தியின் படி இயேசு இறக்கும் போது கூறிய வார்த்தைகள் எவை?
"ஏலி ஏலி லாமா சபக்தானி" என்பதாகும். (மத்.17:46)

510. "பேதுரு" என்னும் கிரேக்கச் சொல்லுக்குப் பொருள் யாது?
"பாறை" (மத் 16:18)

511. இயேசு எத்தனை வயதில் திருமுழுக்குப் பெற்றார்?
முப்பது வயதில்

512. யூதாஸ் எவ்வளவு காசுக்கு இயேசுவைக் காட்டிக் கொடுத்தான்?
முப்பது வெள்ளிக் காசுக்கு (மத்26:15)

513. கடவுளின் அன்பும் இரக்கமும் சிறந்த முறையில் யாரில் வெளிப்படுத்தப்பட்டது?
இயேசு கிறிஸ்துவில்

514. இயேசுவின் சிலுவையில் எவ்வாறு பிலாத்து குற்ற அறிக்கை எழுதி வைத்தான்?
"நாசரேத்து இயேசு யூதர்களின் அரசன்" என்று எழுதி வைத்தான்.
(யோவா19:19)

515. எனது அயலான் யார் என்று திருச்சட்ட அறிஞர் கேட்ட போது இயேசு கூறிய உவமை எது?
நல்ல சமாரியன் உவமை (லூக் 10:29)

516. பழைய ஏற்பாட்டின் கடைசி இறைவாக்கினராகவும் புதிய ஏற்பாட்டின் முதல் இறைவாக்கினராகவும் காணப்படுபவர் யார்?
திருமுழுக்கு யோவான்

517. இயேசு எப்போது அப்போஸ்தலர்களின் பாதங்களைக் கழுவினார்?
பெரிய வியாழனன்று.

518. இயேசு பிறந்து எத்தனையாம் நாள் யூத முறைப்படி பிதாவிற்கு ஒப்புக் கொடுக்கப்பட்டார்?
நாற்பதாம் நாள்

519 .இயேசு எத்தனையாம் வயதில் காணாமல் போய் தேவாலயத்தினுள் கண்டுபிடிக்கப்பட்டார்?
பன்னிரண்டு வயதில் (லூக் 2:42)

520. யூதச் சமூகத்தில் காணப்பட்ட பல்வேறுபட்ட சமூகப் பிரிவுகள் எவை?
☆ பரிசேயர்கள் ☆ சதுசேயர்கள் ☆ சமாரியர்கள்
☆ ஏரோதியர்கள் ☆ எஸ்ஸேனியர்கள் ☆ தீவிரவாதிகள்
☆ மறைநூல் அறிஞர்கள்

521. இயேசுவை விண்ணரசின் போதகராக சித்தரித்த ஆசிரியர் யார்?
மத்தேயு

522. மூவொரு கடவுள் யார்?
பிதா,சுதன்,பரிசுத்த ஆவி

523. புற இனத்தாருக்கு நற்செய்தியை எழுதியவர் யார்?
லூக்கா

524. "இறுதி இராவுணவு" தொடர்பான யோவான் நற்செய்தி, சமநோக்கு நற்செய்திகள் கொண்டுள்ள கருத்தினைத் தருக?
☆ யோவான் நற்செய்தி-பாஸ்காவிற்கு முதல் நாள் இறுதி இராவுணவு.
☆ சமநோக்கு நற்செய்திகள்- பாஸ்கா அன்று இறுதி இராவுணவு.

525. "ஆண்டவருடைய கைகளில் ஆணிகளில் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து அதில் என் விரலை விட்டு அவர் விலாவில் என் கையை விட்டால் அன்றி நான் நம்பமாட்டேன்" என்று கூறிய அப்போஸ்தலன் யார்?
புனித தோமா (யோவா 21:25)

526. பரிசுத்த திருத்துவ அன்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய குடும்பம் எது?
நாசரேத்தின் திருக்குடும்பம்.

527. கன்னிமரியாளின் பெற்றோர் யார்?
☆சுவக்கின், ☆அன்னம்மாள்

528. கிறிஸ்துவினால் கற்பிக்கப்பட்ட செபம் எது?
பரலோக மந்திரம்

529. பேதுரு எப்போது இயேசுவின் அப்போஸ்தலராக அழைக்கப்பட்டார்?
கலிலேயாக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது (லூக்5:10)

530. புனித பேதுரு எவ்வாறு மரணமானார்?
"ஜானிக்குலம்' மலையில் தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு மரணமானார்.

531. திருச்சபையின் தலைவரான புனித பேதுரு யாருடைய ஆட்சிக் காலத்தில் எப்போது மரணமானார்?
நீரோ சக்கரவர்த்தியின் ஆட்சிக் காலத்தில் கி.பி 64ல் மரணமானார்.

532. ஊதாரி மகனைக் கண்ட தந்தை அவனுக்கு கொடுத்த முதல் பரிசு என்ன?
முத்தம்.

533. திருமுழுக்கு யோவான் தனது வெளிப்பாடு வரைக்கும் எங்கு வாழ்ந்தார்?
பாலைவனத்தில்

534. எமக்கு மீட்பைத் தருவது எது?
இறையருள்

535. "உள்ள படியே இவர் நீதிமான் தான்" என்று இயேசு இறந்த போது அறிக்கையிட்டவர் யார்?
சிலுவையடியில் நின்ற நூற்றுவத் தலைவன் (லூக்23:4)

536. ஆண்டவராகிய இயேசு உயிர்த்த பின் எத்தனை நாட்கள் இவ்வுலகில் தங்கியிருந்தார்?
நாற்பது நாட்கள்.

537. இயேசுவின் உடலை அடக்கம் செய்யத் தருமாறு பிலாத்துவிடம் போய்க் கேட்டவர் யார்?
அரிமத்தியா ஊர் யோசேப்பு (லூக்23:56)

538. யோவான் நற்செய்தி எழுதப்பட்டதன் நோக்கம் யாது?
இயேசு கடவுளின் மகனாகிய மெசியா என்று நீங்கள் விசுவசிக்கும் படியும் விசுவசித்து அவர் பெயரால் வாழ்வு பெறும் படியும் எழுதப்பட்டது.

539. "ஆண்டவரே! எனது உடமையில் பாதியைத் தருகிறேன்" இவ்வாறு கூறியவர் யார்?
சக்கேயு.

540. "மக்களுக்குள் எனக்கிருந்த இழிவைப் போக்கினார்" என ஆண்டவரை புகழ்ந்து உரைத்தவள் யார்?
எலிசபேத்

541. 'பெண்களுள் பிறந்தவர்களுள் அருளப்பருக்கு மேலானவர் யாருமில்லை' என கூறியவர் யார்?
இயேசு

542. எதைப் பற்றி இயேசு நற்செய்தி அறிவித்து வந்தார்?
கடவுளின் அரசைப் பற்றி

543. 'நீர் என் இல்லத்தினுள் வர நான் தகுதியற்றவன்' என யேசுவிடம் கூறியவர் யார்?
நூற்றுவர் தலைவன்.

544. இயேசு ஆற்றிய புதுமைகளை கேள்விப்பட்டு கலக்கம் அடைந்தவன் யார்?
ஏரோது அரசன் (லூக் 9:7)

545. உயிர்த்தவர்கள் யாருக்கு ஒப்பாவார்கள்?
வானதூதர்களுக்கு.

546. இயேசுவிற்கு மரணத்தீர்ப்பை வழங்கியவன் யார்?
பிலாத்து (லூக் 27:26)

547. "நாம் பாஸ்கா விருந்துண்ண நீங்கள் போய் ஏற்பாடு செய்யுங்கள்" என இயேசு யாரை அனுப்பினார்?
பேதுருவையும் யோவானையும் (லூக் 22.8)

548. "பெயல் செபூல்" என்பவன் யார்?
பேய்களின் தலைவன் (மத் 12:24)

549. உடலுக்கு விளக்கு எது?
கண் (லூக் 11:34)

550. "திராக்மா" என்பது என்ன?
ஒரு தொழிலாளியின் ஒரு நாள் கூலிக்கு இணையான கிரேக்க வெள்ளி நாணயம்.

551. யூதர்கள் இயேசுவிற்காக யாரை விடுதலை செய்யுமாறு கேட்டனர்?
பரபாஸை (மத் 27:21)

552. "சமாரியா" நகர் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் எவ்வாறு அழைக்கப்பட்டது?
செபஸ்து

553. மரியாளுக்கு இயேசு பிறப்பை அறிவித்த தூதர் யார்?
கபிரியேல் தூதர் (லூக் 1:26)

554. எந்தத் திருவிழாவின் போது இயேசு நற்கருணையை ஏற்படுத்தினார்?
புளியாத அப்பத்திருவிழாவின் போது

555. தாழ்மையான செபம் கடவுளுக்கு விருப்பமானது என தெளிவு படுத்தும் உவமை எது?
பரிசேயனும் ஆயக்காரனும் உவமை (லூக் 18:9)

556. ஏரோது எந்த நாட்டு அரசன்?
யூதேயா (லூக் 1:50)

557. மரியாளின் பிறந்த ஊர் எது?.
நாசரேத்து (லூக் 1:26)

558. யோசேப்பு எந்தக் குலத்தைச் சேர்ந்தவர்?
தாவீது குலம் (லூக் 1:27)

559. உலகம் முழுவதும் மக்கள் தொகையை கணக்கிடும் படி கட்டளை பிறப்பித்த அரசன் யார்?
செசார் அகுஸ்துஸ் (லூக் 2:1)

560. இயேசுவின் பிறப்புச் செய்தி முதன் முதல் யாருக்கு அறிவிக்கப்பட்டது?
இடையருக்கு (லூக்2:10)

561. பேதுரு இயேசுவை எத்தனை முறை மறுதலித்தார்?
மூன்று முறை (லூக் 22:55)

562. பேதுரு யாரிடம் முதன் முறையாக இயேசுவை மறுதலித்தார்?
ஊழியக்காரியிடம் (மத் 26:69)

563. ஜெருசலேம் ஆலயத்தில் மீட்பரை எதிர்பார்த்துக் காத்திருந்த பக்தன் யார்?
சிமியோன் (லூக் 2:25)

564. இயேசுவின் காலில் வீழ்ந்து வணங்கிய செபக்கூடத் தலைவன் யார்?
ஜாயீர் (லூக் 8:41)

565. இயேசு உருமாறிய போது அழைத்துச் சென்ற சீடர்கள் யாவர்?
பேதுரு, யாக்கோபு, யோவான், (மத் 17:1)

566. இயேசுவின் உருமாற்றத்தின் போது இயேசுவோடு உரையாடியவர்கள் யாவர்?
★ எலியாஸ், ★ மோசே (மத் 17:3)

567. "உங்களுள் ஒருவன் பேயாக இருக்கிறான்" என்று யாரைக் குறிப்பிட்டு இயேசு இவ்வாறு கூறினார்?
யூதாஸ் இஸ்கரியோத்தைக் குறித்து

568.பேதுரு தாக்கிய ஊழியன் யார்?
மால்க்குஸ் (யோவா 18:10)

569. இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைக் கட்டி யாரிடம் முதல் கொண்டு போனார்கள்?
அன்னாசிடம் (யோவா 18:13)

570. இயேசுவின் கல்லறையைப் பார்க்க ஞாயிறு காலை ஓடி வந்த சீடர்கள் யாவர்?
★பேதுரு, ★யோவான் (யோவா 20:2)

571. தோமாவிற்கு இயேசு உயிர்த்து எத்தனையாம் நாள் காட்சி கொடுத்தார்?
8ம் நாள் (யோவா 20:2)

572. "அக்கெல் டாமா" என்பதன் அர்த்தம் என்ன?
இரத்த நிலம்.

573. சுங்கத் துறையில் இருக்கும் போது "என்னைப் பின் செல்" என்று இயேசு அழைத்த அப்போஸ்தலர் யார்?
மத்தேயு (மத் 9:9)

574. "இவன் பேய்களின் தலைவனைக் கொண்டே பேய்களை ஓட்டுபவன்" என்று கூறியவர் யார்?
பரிசேயர் (மத் 12:24)

575. "இயேசுவே என்னைக் காப்பாற்றும்" என்றும் அலறியவர் யார்?
புனித பேதுரு.

576. யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்தமையால் கிடைத்த முப்பது வெள்ளிக் காசுக்கு வாங்கிய நிலத்தின் பெயரென்ன?
இரத்தநிலம் (அக்கெல்டாமா)

577. "நீ செய்ய விருப்பதை விரைவில் செய்" என்று இயேசு யாரிடம் கூறினார்?
யூதாஸ் இஸ்கரியோத்திடம்

578. பேதுரு எத்திருவிழாவின் போது ஏரோதுவால் கைது செய்யப்பட்டார்?
புளியாத அப்பத்திருவிழாவின் போது

579. தாய் தந்தையை தூற்றுபவன் எப்படி ஆகட்டும் என்று கடவுள் கூறியுள்ளார்?
செத்தொழியட்டும் என்று கூறியுள்ளார்.

580. எந்த நாணயத்தை பணமாகச் செலுத்தும்படி இயேசு சொன்னார்?
ஸ்தாத்தோர்

581. எத்தனை முறை சகோதரனை மன்னிக்கும்படி இயேசு கூறுகிறார்?
எழுபது முறைகள் ஏழுமுறை.

582. 'இரண்டு மூன்று பேர் என் பெயரால் கூடியிருக்கும் இடத்தில் நான் அவர்களுடன் இருக்கிறேன்' என்று கூறியவர் யார்?
இயேசு கிறிஸ்து.

583. பணக்காரன் விண்ணகம் செல்வதை விட எது எளிதாக இருக்கும்?
ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது.

584. இயேசு இறைவனுடைய வீடு எப்படிப்பட்டது என்றார்?
செபவீடு என்றார். (மத்.21:18)

585. இயேசு பசியுற்று எந்த மரத்தை அணுகிச் சென்றார்?
அத்தி மரத்தை (மத்.21:18)

586. பாலைவனத்தில் ஆண்டவருடைய வாக்கு யாருக்கு அருளப்பட்டது?
திருமுழுக்கு யோவானுக்கு

587. தம் சொந்த ஊரில் ஏற்கப்படாதவர் என்று இயேசு யாரைக் குறிப்பிட்டார்?
இறைவாக்கினரை.

588. யாரைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்?
போலி இறைவாக்கினரைக் குறித்து. (மத். 7:15)

589. பிச்சையிடும் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று இயேசு கூறுகிறார்?
"வலக்கை செய்வதை இடக்கை அறியாதிருக்கட்டும்" என்று கூறுகிறார். (மத்.6:3)

590. "போதகரே நீர் எங்கே சென்றாலும் நானும் உம்மைப் பின்பற்றுவேன்" என்று கூறியவர் யார்?
மறை நூல் அறிஞர். (மத்.8:19)

591. இன்மையிலும் மறுமையிலும் மன்னிப்பு பெறமாட்டாதவர் யார்?
தூய ஆவிக்கு எதிராகப் பேசுபவர்கள். (மத்.12:32)

592. பேய் பிடித்தவன் எங்கு தங்கியிருந்தான்?
கல்லறைகளில் தங்கியிருந்தான். (லூக்.8:17)

593. நாம் முதலில் எதைத் தேட வேண்டும்?
கடவுளின் ஆட்சியைத் தேட வேண்டும். (லூக்.12:31)

594. இயேசு கற்பித்துக் கொடுத்த வாழ்த்துச் செய்தி யாது?
அமைதி (மத் 10:13)

595. "நிலையான கூடாரம்" என்பது எதைக் குறிக்கும்?
விண்ணுலகைக் குறிக்கும்.

596. தந்தை வாக்களித்த கொடை எது?
வல்லமை (லூக்.24:49)

597. சீமோனுக்கு இயேசு கிறிஸ்து அளித்த மறுபெயர் என்ன?
பேதுரு (லூக் 6:14)

598. மூன்று ஞானிகள் இயேசுவிற்கு செலுத்திய காணிக்கைகள் எவை?
★பொன், ★ தூபம், ★வெள்ளைப் போளம் (மத் 2:11)

599. விண்ணரசு யாருக்கு உரியது என இயேசு விரும்புகின்றார்?
குழந்தைகளுக்கு

600. "200 வெள்ளிக் காசுக்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு சிறு துண்டு கூட வராதே" என்று கூறிய சீடர் யார்?
பிலிப்பு (யோவா 6:7)

601. "ஒரு பையனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பமும் இரண்டு மீனும் உள்ளன". என்று கூறிய சீடர் யார்?
அந்திரேயா (யோவா 6:8)

602. இயேசுவின் சடலத்தை அடக்கம் செய்ய முன்வந்தவர்கள் யாவர்?
அரிமத்தியா ஊர் யோசேப்பு, நிக்கதேமு

603. பவுலின் இடைக்கச்சையை எடுத்து தன் கால்களையும் கைகளையும் கட்டிக்கொண்டு இறைவாக்கு கூறியவர் யார்?
அகபு.

604. அறுவடைக்காக நன்றி செலுத்தும் யூதத் திருவிழா எது?
பெந்தக் கோஸ்து

605. "ஓசன்னா" என்ற எபிரேயச் சொல்லுக்கு பொருள் யாது?
விடுவித்தருளும்.

606. சிலுவையடியில் இயேசு கூறிய நிறைவு வார்த்தைகள் எவை?
தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்.

607. முடிவில்லா வாழ்விலும் நம்மிலும் நிலைத்திருக்கும் கொடை எது?
இறை அன்பு

608. கடவுளுடைய அன்பும் இரக்கமும் சிறந்த முறையில் வெளிப்பட்டது யாரில்?
இயேசு கிறிஸ்துவில்

609. இறை அரசின் மதிப்பீடுகள் எவை?
★ இறைவனில் தங்கியிருத்தல் ★ தூய்மை
★ ஒற்றுமை ★ நீதி ★ அன்பு போன்றவையாகும்.

610. புதுமைகளை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
★ இயற்கை பற்றிய புதுமை ★ குணமாக்கும் புதுமை
★ உயிர்ப்பிக்கும் புதுமை ★ பேய்களை ஓட்டும் புதுமை
(உளப்புதுமை) என வகைப்படுத்தலாம்.

611. "மாரானாத்தா" என்பதன் பொருள் யாது?
ஆண்டவரே வருக.

612. இயேசு எக்குலத்தின் மீது ஆட்சி செய்வார் என வானதூதர் உரைத்தனர்?
யாக்கோபுவின் குலத்தின் மீது

613. இயேசுவின் கருத்தரிப்பு யார் மூலம் நிகழ்ந்தது?
பரிசுத்த ஆவிமூலம் நிகழ்ந்தது. (லூக்.1:35)

614. "ஆண்டவர் சொன்ன வாக்கு நிறைவேறும்" என்று விசுவசித்தவர் "பேறு பெற்றவர்" என்று கூச்சல் எழுப்பியவர் யார்?
எலிசபெத்

615. இயேசுவின் விருத்த சேதனம் எத்தனையாம் நாள் நிறைவேற்றப்பட்டது?
8ம் நாள் (லூக்.2:21)

616. யூதர்கள் பாஸ்காத் திருவிழா கொண்டாட எங்கே சென்றார்கள்?
ஜெருசலேமுக்கு

617. இயேசுவின் பெற்றோர் அவரைத் தேடி எத்தனை நாட்கள் அலைந்தனர்?
3 நாட்கள்

618. பேய் பிடித்தவனைப் பார்த்து உன் பெயரென்ன என்று இயேசு கேட்ட போது அவன் கூறிய பதில் என்ன?
படை.

619. வாழ்வு தரும் உணவை எங்களுக்கு எப்பொழுதும் தாரும் என்று மக்கள் கேட்ட போது இயேசு கூறிய பதில் என்ன?
"நானே உயிர் தரும் உணவு"

620. "குருவே நாம் இங்கே இருப்பது எத்துணை நன்று" என பேதுரு எப்போது கூறினார்?
இயேசு மறுவுருப் பெற்ற போது.

621. அன்னாஸ் இயேசுவை யாரிடம் அனுப்பினார்?
கைப்பாசிடம் (யோவா.18:24)

622. "ஆண்டவரைக் கல்லறையிலிருந்து எடுத்து விட்டனர் அவரை எங்கே வைத்தனரோ அறியோம்" என்று முறையிட்ட பெண் யார்?
மகதலா மரியாள் (யோவா.20:13)

623. இயேசு திருமண விருந்தை எதற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்?
கடவுளின் அரசிற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

624. உண்மைச் செல்வத்தை எங்கே சேர்த்து வைக்கும்படி இயேசு கூறுகிறார்?
விண்ணுலகில்.

625. நரிகளுக்கு வளைகளுண்டு வானகத்துப் பறவைகளுக்கு கூடுகளுண்டு யாருக்குத் தலை சாய்க்க இடமில்லை?
மனுமகனுக்கு (மத்.8:20)

626. தோமாவின் மறுபெயர் என்ன?
திதிமு.

627. "நீ வயது முதிர்ந்த போது உன் கைகளை விரித்துக் கொடுப்பாய்" என்று இயேசு யாருக்குக் கூறினார்?
பேதுருவிற்கு.

628. இறுதி இராவுணவின் போது இயேசுவின் மார்பில் சாய்ந்த சீடன் யார்?
யோவான்

629. மலையைப் பெயர்க்குமளவிற்கு விசுவாசம் வேண்டும் என்ற இயேசு விசுவாசத்தை எந்தத் தானியத்தோடு ஒப்பிடுகிறார்?
கடுகு (மத்.17:20)

630. முதல்வனாய் இருக்க வேண்டியவன் எப்படி இருக்க வேண்டும் என்று இயேசு சீடர்களுக்கு கற்பித்தார்?
கடையனாக இருக்கும்படி கற்பித்தார். (மாற்.9:35)

631. கைப்பாசுக்கு அன்னாஸ் என்ன முறையானவன்?
மாமன் (யோவா.18:14)

632. இயேசுவை விடுவிக்க வழி தேடிய பிலாத்துவைப் பார்த்து யூதர்கள் கையாண்ட தந்திரம் என்ன?
இவனை விடுவித்தால் நீர் செசாரின் நண்பன் அல்ல. (யோ.19:12)

633. ஊதாரி மகன் இறுதியில் செய்த வேலை என்ன?
பன்றி மேய்த்தான் (லூக்.15:15)

634. எதற்கு ஈடாக ஒன்றையும் கொடுக்க முடியாது?
ஆன்மாவிற்கு (மத்.16:26)

## திருத்தூதர் பணிகள

635. திருத்தூதர் பணியின் ஆசிரியர் யார்?
லூக்கா

636. பரிசுத்த ஆவியின் நற்செய்தி எனப்படுவது எது?
திருத்தூதர் பணிகள்

637. திருத்தூதர் பணி எழுதப்பட்ட காலம் யாது?
கி.பி.80-90

638. முதல் வேதசாட்சி யார்?
ஸ்தேவான்

639. ஸ்தேவான் எப்படிக் கொல்லப்பட்டார்?
கல்லால் எறிந்து (தி.ப 7:58)

640. தலைமைக் குருவிடம் அனுமதி பெற்றுக்கொண்டு கிறிஸ்தவர்களை கைது செய்வதற்காகச் சென்றவர் யார்?
சவுல் (புனித பவுல்) (தி.ப 9:2)

641. சவுலுக்கு திருமுழுக்கு கொடுத்தவர் யார்?
அனனியா (தி.ப 9:17)

642. யூதாசின் இடத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர் யார்?
மத்தியா (தி.ப 1:26)

643. மத்தியா எவ்வாறு தெரிவு செய்யப்பட்டார்?
திருவுளச்சீட்டின் மூலம் (தி.ப 1:26)

644. பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்ட பின் பேதுரு செய்த முதல் புதுமை எது?
பிறவியிலே முடவனாயிருந்தவனை குணமாக்கியது ஆகும். (தி.ப 3:7)

645. திருத்தொண்டர்களாக (தியாக்கோன்) அப்போஸ்தவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் யாவர்?
☆ஸ்தேவான் ☆தீமோன் ☆பிலிப்பு ☆பர்மனா
☆பிரக்கோர் ☆நிக்கொலா ☆நிக்கானோர்
(தி.ப 6:5)

646. சீடர்கள் "கிறிஸ்தவர்கள்" என்ற பெயரை எங்கே பெற்றனர்?
அந்தியோக்கியாவில்

647. புனித பவுலின் முதல் மறைபோதகப் பயணத்தில் பங்கேற்றவர்கள் யாவர்?
☆பர்ணபா, ☆மாற்கு எனும் யோவான் (தி.ப 3:1)

648. புனித பவுலின் இரண்டாம் மறைபோதகப் பயணத்தில் பங்கேற்றவர்கள் யாவர்?
☆சீலா, ☆திமோத்தேயு, ☆லூக்காஸ் போன்றவர்கள். (தி.ப 16:16)

649. இரண்டாம் பயணத்தின் போது தான் செய்து கொண்ட பொருத்தத்தின் படி பவுல் எங்கே முடிவெட்டிக் கொண்டார்?
கெங்கிரைத் துறையில்

650. புனித பவுலின் மூன்றாம் பயணத்தில் பங்கேற்ற ஐவரின் பெயர்களைக் கூறுக?
☆திமோத்தேயு ☆எரஸ்து ☆காயு ☆அரஸ்தார்க்கு
☆சோபத்தர்.

651. புனித பவுலால் உயிர்ப்பிக்கப்பட்ட வாலிபன் யார்?
ஐத்திகு (தி.ப.20:12)

652. இயேசுவால் புற இனத்தாருக்கு நற் செய்தியை அறிவிக்க என்னால் தெரிந்து கொள்ளப்பட்ட விசேட கருவி எனக் கூறப்பட்டவர் யார்?
புனித பவுல் (தி.ப.5:9)

653. புனித பவுல் எவ்வாறு மரணமானார்?
"சால்வியன்" என்னுமிடத்தில் சிரச்சேதம் செய்யப்பட்டு.

654. ஜெருசலம் சீடர்களுடன் பவுலைச் சேர்த்துக் கொள்ள உதவியவர் யார்?
பர்ணபா (தி.ப.9:27)

655. உலகெங்கும் பஞ்சம் உண்டாகும் என முன்னறிவித்த இறைவாக்கினர் யார்?
அகபு

656. புற இனத்தாரின் அப்போஸ்தலன் யார்?
புனித பவுல்

657. ஆதிக்கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கை முறையில் நிலவிய கிறிஸ்தவ பண்புகளைக் கூறுக?
★ அவர்கள் வேற்றுமை பாராட்டாது ஒற்றுமையாக இருந்தனர்.
★ ஒருவரை ஒருவர் புரிந்து நட்புடன் வாழ்ந்தனர்.
★ பகையின்றி சகோதரர்கள் போல் அன்பு கொண்டு வாழ்ந்தனர்.
★ தமது உடமையை பொதுப்பண்டமாக கொண்டு வாழ்ந்தனர்
★ நாள் தோறும் கோயிலில் கூடி ஒரே மனதாய் செபத்தில் நிலைத்திருந்தனர்
★ உடமைகளை விற்று அவரவர் தேவைக்கு ஏற்றவாறு பங்கிடுவார்கள்.
★ இறை பிரசன்னத்தை உணர்ந்தவர்களாக வாழ்ந்தார்கள்.

658. "இயேசு கிறிஸ்துவின் கைதி" என தன்னை அழைத்துக் கொள்பவர் யார்?
புனித பவுல்

659. "இந்நகரில் எனக்குரிய மக்கள் பலர் உள்ளனர்" என்று ஆண்டவர் புனித பவுலுக்கு காட்சியில் தோன்றி கூறியது எங்கே?
கொரிந்து நகரில்

660. "பெறுவதிலும் தருவதே இன்பம்" என்று இயேசு கிறிஸ்து சொன்னதை நினைவில் வைத்தல் வேண்டும் என்று கூறியவர் யார்?
புனித பவுல்

661. "பெந்தக் கோஸ்து" என்பதன் பொருள் யாது?
பாஸ்கா திருவிழாவிற்குப் பின் ஐம்பதாவது நாள்

662. "என்னிடமுள்ளதை உனக்குக் கொடுக்கிறேன்" என்று கூறி பிறவி முடவனைக் குணப்படுத்தியவர் யார்?
பேதுரு (தி.ப.3:6)

663. "பணத்தைக் கொடுத்து கடவுளின் கொடையையா வாங்க நினைத்தாய்" என்று பேதுரு யாரைக் கடிந்து கொண்டார்?
மந்திரவாதி சீமோனை

664. சீடர்கள் ஒலிவத் தோப்பில் இருந்து எங்கே திரும்பினார்கள்?
ஜெருசலேமிற்கு (தி.ப.1:3)

665. மக்கள் மத்தியில் நன்மதிப்பு பெற்ற சட்ட வல்லுனர் யார்?
கமாலியேல் (தி.ப.5:34)

666. புனித பவுல் எந்த நகரைச் சேர்ந்தவர்?
சிசிலியா நாட்டிலுள்ள தர்சு நகரைச் சேர்ந்தவர்.

667. கிறிஸ்துவின் மறை உடலுக்கு திருச்சபையை ஒப்பிட்டுக் கூறியவர் யார்?
புனித பவுல்

668. விசுவாசத்தின் வழியாக நாம் பெற்றுக் கொண்டது என்ன?
மீட்பு.

669. "நாம் இவ்வுலகில் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் எதிர்காலத்தில் நாம் பெறவிருக்கும் மகிமையோடு ஒப்பிடவும் முடியாது" எனக் கூறியவர் யார்?
புனித பவுல்

670. 'கையால் செய்யப்பட்ட தெய்வங்கள் தெய்வங்களே அல்ல' என்று எபேசு நகரில் போதித்தது யார்?
புனித பவுல்

671. லூக்கா யாருக்கு துணையாக இருந்து நற்செய்தியை போதித்தார்?
புனித பவுலுக்கு

672. தீவிரவாதி என அழைக்கப்பட்டவர் யார்?
சீமோன் (தி.ப.1:13)

673. யூதாசுக்குப் பதிலாக வேறொருவரைத் தேர்ந்தெடுத்த போது எத்தனை பேர் கூடி இருந்தனர்?
நூற்று இருபது பேர்.

674. புனித லூக்காவின் தொழில் யாது?
மருத்துவம்.

675. பெந்தக் கோஸ்தே நாளில் சீடர்களுக்கு என்ன நடந்தது?
தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள். (தி.ப.2:4)

676. பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒருவர் பிச்சை கேட்டு எங்கே உட்கார்ந்திருந்தார்?
ஜெருசலேம் ஆலய அழகு வாயிலில். (தி.ப.3:2)

677. மெசியா துன்புறவேண்டும் என முன்னறிவித்த இறைவாக்கினர் யார்?
எசாயா

678. யோவான்,பேதுருவை விசாரித்த தலைமைக் குருக்கள் யார்?
★அன்னா, ★கயபா, ★யோவான், ★அலக்ஸ்சாந்தர். (தி.ப.4:6)

679. "நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் முடியாது" எனக்கூறியவர்கள் யார்?
★பேதுரு, ★யோவான் (தி.ப.4:20)

680. சொத்துக்களை விற்ற தொகையில் ஒரு பகுதியை வைத்துக் கொண்டு மறு பகுதியை திருத்தூதரின் காலடியில் வைத்தது யார்?
★அனனியா, ★சப்பிரா (தி.ப.5:21)

681. தன்னை பெரிய மனிதனாகவும் மெசியாவாகவும் காட்டி ஒழிந்த போன இருவர் யார்?
★ தெயுதா (தி.ப.5:36)
★ கலிலேயனான யூதா (தி.ப.5:37)

682. ஸ்தேவானுக்கு எதிராகக் கொண்டுவந்த மூன்று பொய்ச்சாட்சியம் யாது?
ஆலயம், திருச்சட்டம், மோசே இவற்றிற்கு எதிராகப் பேசுகிறான் (தி.ப.6:13)

683. கடவுளுக்கு முதன் முதல் ஆலயம் அமைக்க விரும்பியவர் யார்? பின்பு உண்மையில் ஆலயம் அமைத்தவர் யார்?
★ தாவீது
★ சாலமோன்

684. "இதோ வானம் திறந்துள்ளதையும், மனுமகன் கடவுளின் வலப் பக்கம் நிற்பதையும் காண்கிறேன்" என்று கூறியவர் யார்?
ஸ்தேவான் (தி.ப.7:56)

685. ஸ்தேவானின் கொலைக்கு உடன்பட்டவர் யார்?
சவுல் (தி.ப.8:1)

686. முதல் கிறிஸ்தவ ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது எங்கு?
ஜெருசலேமில்.

687. ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறையைக் கூறும் நூல் எது?
திருத்தூதர் பணி.

688. சமாரியாவுக்கு முதலில் நற்செய்தி போதிக்கச் சென்ற திருத்தூதர் யார்?
பிலிப்பு (தி.ப.8:4)

689. பணத்தைக் கொடுத்து கடவுளின் கொடையை வாங்க நினைத்தவர் யார்?
சீமோன் (தி.ப.8:20)

690. அண்ணகன் தேரில் உட்கார்ந்து கொண்டு எதைப் படித்துக் கொண்டு சென்றான்?
எசாயாவின் இறைவாக்கு நூல் பகுதியை படித்துக்குக் கொண்டு சென்றான். (தி.ப.8:28).

691. சவுல் எங்கு செல்லும் போது அழைப்பு பெற்றார்?
தமஸ்கு செல்லும் போது (தி.ப.9:3)

692. எத்தியோப்பிய அண்ணகன் யாரிடம் ஞானஸ்தானம் பெற்றான்?
பிலிப்புவிடம் (தி.ப.8:38)

693. தமஸ்கில் சவுல் எத்தனை நாட்கள் பார்வையற்று உண்ணாமல் குடிக்காமல் இருந்தார்?
மூன்று நாள் (தி.ப.9:9)

694. எட்டு ஆண்டுகள் படுக்கையில் கிடந்து பேதுருவால் குணம் பெற்ற திமிர்வாதக் காரன் யார்?
ஐனேயா (தி.ப.9:33)

695. தமஸ்கில் சவுலை யூதர்கள் கொல்லத்திட்டமிட்ட போது எப்படி காப்பாற்றப் பட்டார்கள்?
அவருடைய சீடர்கள் இரவில் அவரை கூடையில் வைத்து, நகர மதில் வழியாக இறக்கி விட்டு காப்பாற்றப்பட்டார்.
(தி.ப.9:25)

696. அப்பொல்லோ எங்கு பிறந்தார்?
அலெக்சாந்திரியாவில் (தி.ப.18:24)

697. பேதுரு எந்த நகரில் மன்றாடிக் கொண்டிருந்த போது காட்சி கண்டார்?
யோப்பாவில் (தி.ப.11:5)

698. ஜெருசலேமில் பவுல் கைதான போது என்ன மொழி பேசினார்?
எபிரேயம் (தி.ப.22:1)

699. பவுலின் யூதக்குரு யார்?
கமாலியேல் (தி.ப.22:3)

700. செசரியா படைத்தலைவன் யார்?
லீசியா (தி.ப.24:22)

701. பவுல் எந்த நடுவர் மன்றத்தின் முன் விசாரணைக்காக நின்றார்?
சீசருடைய நடுவர் மன்றத்தின் முன் (தி.ப.25:10)

702. திருத்தூதரைக் கைது செய்து, பொதுச் சிறையில் வைத்த போது காப்பாற்றியது யார்?
ஆண்டவரின் தூதர்.

703. மந்திரவாதி சீமோன் யாரிடம் ஞானஸ்தானம் பெற்றான்?
பிலிப்பு (தி.ப.8:13)

704. "ஆண்டவரே நீர் யார்" என்று சவுல் கேட்ட போது ஆண்டவர் கூறிய பதில் யாது?
"நீ துன்புறுத்தும் இயேசு நானே" என்று கூறினார். (தி.ப.9:16)

705. பவுலுடைய போதனையை மனத்தில் இருத்த ஆண்டவர் யாருடைய இதயத்தில் அருளொளி வீசினார்?
லீதியா (தி.ப.16:4)

706. பேதுரு உள்ளே வர அவரது காலில் வீழ்ந்து வணங்கியவர் யார்?
கொர்னேலியு (தி.ப.10:25)

707. கால் வழங்காத முடவன் ஒருவன் எங்கே இருந்தான்?
லிஸ்திராவில் (தி.ப 14::8)

708. தம் வீட்டார் அனைவரோடும் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்ட தொழுகைக் கூடத் தலைவன் யார்?
கிறிஸ்பு (தி.ப.18.8)

709. கன்னிமையின் தெய்வம் எது?
தியானா (தி.ப.19.24)

710. பவுல் விரும்பாத பொருட்கள் எவை?
★பொன் ★வெள்ளி ★ஆடை என்பனவாகும். (தி.ப.20.33)

711. உரோமைக் குடிமகனை எதனால் அடிக்கக் கூடாது?
சாட்டையால் அடிக்கக் கூடாது. (தி.ப.22.25)

712. பவுலை இத்தாலிக்கு அழைத்துச் சென்றவர் யார்?
யூலியு (தி.ப.27.1)

713. பவுலும் மற்றவர்களும் உயிர் தப்பிய இடம் எது?
மால்தா தீவு (தி.ப.28.1)

714. கடவுளின் மீட்பு யாருக்கு அளிக்கப்பட்டது?
புற இனத்தாருக்கு (தி.ப.28.28)

715. "தபீத்தா" என்பதன் பொருள் யாது?
பெண் மான் (தி.ப.9.36)

716. பரிசுத்த அன்னையாம் திருச்சபையின் பிறப்பு விழா யாது?
பெந்தக் கோஸ்து நாள் ஆகும். (தி.ப.2.1)

717. புனித பேதுரு பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்ட பின் ஆற்றிய மறை உரையில் எத்தனை பேர் மனம் திரும்பினார்கள்?
மூவாயிரம் பேர் ஒரே தடவையில் மனம் திரும்பினார்கள்.
(தி.ப.2.41)

718. "நாம் கடவுளுடைய பிள்ளைகளாய் இருப்பதனால் மனித கற்பனையாலும் சிற்ப வேலைத் திறமையாலும் உருவாக்கப்பட்ட பொன், வெள்ளி, கல் உருவங்களைப் போல கடவுள் இருப்பார் என நாம் எண்ணுவது முறையாகாது" என்று கூறியவர் யார்?
புனித பவுல்

## நிருபங்களும் திருவெளிப்பாடும்

719. தூய பவுலின் திருமுகங்கள் எத்தனை?
13

720. புனித பவுலினால் எழுதப்பட்ட பெரிய மடல்கள் எவை?
★உரோமையர், ★1.கொரிந்தியர், ★11.கொரிந்தியர், ★கலாத்தியர்

721. சிறைக்கூட மடல்கள் எவை?
★பிலிப்பியர், ★பிலமோன், ★கொலோசையர், ★எபேசியர்.

722. தூய பவுல் தனது கடிதங்களில் எவ்வாறு வாழ்த்துக் கூறுகிறார்?
அருளும் சமாதானமும்

723. கிறிஸ்தவன் ஒருவன் தலைச்சீராக அணிந்து கொள்ள வேண்டியது எது?
மீட்பை (எபே.6:17)

724. கிறிஸ்தவன் தன்மார்புக்கவசமாக அணிந்துகொள்ள வேண்டியவை எவை என புனிதபவுல் குறிப்பிடுகின்றார்?
நீதியை (எபே.6:14)

725. அன்பு எவற்றைச் செய்யாது என பவுல் குறிப்பிடுகின்றா
★அழுக்காறு கொள்ளாது ★இறுமாப்பு அடையாது
★இழிவானதைச் செய்யாது ★வருமம் வைக்காது
★சீற்றத்திற்கு இடம் தராது ★அநீதியை கண்டு மகிழ்வுறாத
★உண்மையைக் கண்டு மகிழ்வுறும்

726. புனித பவுலால் கடைசியாக எழுதப்பட்ட திருமுகம் எது?
II திமோத்தேயு

727. அன்பு எவற்றைச் செய்யும் என பவுல் குறிப்பிடுகின்றார்?
☆அன்பு பொறுமையுள்ளது
☆அன்பு பரிவுள்ளது
☆அன்பு நம்பிக்கையில் தளராது
☆அன்பு அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும்
☆அன்பு பிறர்மீது நல்லெண்ணம் இழக்காதிருக்கும்
☆அன்பு அனைத்தையும் தாங்கிக் கொள்ளும்.

728. புனித பவுல் திருமுகங்களை ஏன் எழுதினார்?
☆நலன் விசாரிக்க ☆தவறுகளைச் சுட்டிக் காட்ட
☆அறிவுரைகளைக்கூறி பிரச்சனைகளைத் தீர்க்க
☆சந்தேகங்களுக்கு விளக்கம் கொடுக்க
☆விசுவாசத்தில் உறுதி அடையவும் எழுதினார்.

729. தீங்கிழைப்போருக்கு எது உரிமையாகாது?
இறையாட்சி (1கொரி.6:9)

730. கடவுளின் ஆலயம் எப்படிப்பட்டது?
தூய்மைமிக்கது (1கொரி.2:5)

731. மனித நம்பிக்கைக்கு அடிப்படைத் தேவை எது?
கடவுளின் வல்லமை (1கொரி.2:5)

732. அதிகாரத்தின் அடையாளமாக பெண்கள் என்ன செய்ய வேண்டும்?
பெண்கள் தம் தலைகளை மூடிக்கொள்ள வேண்டும்.

733. திருத்தூதர்களில் மிகக் கடையவரும் திருச்சபையை துன்புறுத்தியவரும் யார்?
புனித பவுல் (1கொரி.15:9)

734. புனித பவுலையும் திமோத்தேயுவையும் அளவுக்கு மிஞ்சி இன்னல்கள் வாட்டிய இடம் எது?
ஆசியா (2கொரி.1:8)

735. சாவின் கொடுக்கு எது என பவுல் குறிப்பிடுகின்றார்?
பாவம் (1கொரி.15:56)

736. நம் உரிமைப்பேற்றின் அச்சாரம் யார்?
தூய ஆவி (எபே.3:17)

737. நம் வாழ்வுக்கு ஆணிவேரும், அடித்தளமுமானது எது?
அன்பு (எபே.3:17)

738. இயேசு கிறிஸ்து வழியாக நாம் பெற்ற இரு பயன்கள் எவை?
★மீட்பு ★மன்னிப்பு (எபே.1:7)

739. பவுல் தெசலோனிக்கேயரை எதில் வளர்ந்தோங்க வேண்டும் என்கிறார்?
அன்பில் (1தெ.3:11)

740. ஆயர் மடல்கள் என அழைக்கப்படும் திருமுகங்கள் எவை?
★1 திமோத்தேயு, ★2 திமோத்தேயு, ★ தீத்து.

741. மீட்பளிப்பதற்கு கடவுளின் வல்லமையாய் உள்ளது எது?
நற்செய்தி

742. உங்களைத் துன்புறுத்துவோருக்கு கூறவேண்டியது என்ன?
ஆசி (உரோ.12:14)

743. கிறிஸ்தவர்களுக்கு இருக்கும் கடன் யாது?
அயலவரில் அன்பு செலுத்துவது (உரோ.13:8)

744. கிறிஸ்து இயேசுவின் வழியாக கொரிந்தியருக்கு அளிக்கப்பட்டது எது?
இறையருள் (1கொரி.1:4)

745. நமக்காகப் பலியிடப்பட்டவர் யார்?
இயேசு கிறிஸ்து

746. தூய ஆவி தங்கும் கோவில் எது?
நமது உடல் (1கொரி.6:19)

747. "எல்லோருக்கும் எல்லாமானேன்" என்று கூறியவர் யார்?
புனித பவுல் (1கொரி.9:22)

748. இறந்தோரிடமிருந்து முதலில் உயிர் பெற்றவர் யார்?
இயேசு கிறிஸ்து (1கொரி.15:23)

749. ஆறுதல் அனைத்திற்கும் ஊற்றாய் இருப்பவர் யார்?
கடவுள் (2கொரி.1:3)

750. சட்டம் சார்ந்த திருப்பணியால் விளைவது என்ன?
சாவு (2கொரி.3:7)

751. கடவுளின் அன்புக்குரியவர் யார்?
முகமலர்ச்சியோடு கொடுப்பவர் (2கொரி.9:7)

752. யூதர்கள் புனித பவுலை எத்தனை முறை சாட்டையால் அடித்தனர்?
ஐந்து முறை (2கொரி.11:24)

753. புனித பவுல் தன்னை வருத்திய துன்பம் நீங்குமாறு எத்தனை முறை வருந்தி வேண்டினார்?
மூன்று முறை (2கொரி.12:8)

754. புனித பவுல் யாருக்கு நற்செய்தி அறிவிக்க வேண்டுமென்று கடவுள் விருப்பம் கொண்டார்?
புற இனத்தவர்களுக்கு (கலா.1:16)

755. கிறிஸ்துவை அணிந்து கொண்டவர்கள் யார்?
திருமுழுக்குப் பெற்றவர்கள் (கலா.3:27)

756. அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்தவர் யார்?
இயேசு கிறிஸ்து (கலா.5:17)

757. தூய ஆவிக்கு முரணானது எது?
ஊனியல்பின் இச்சை (கலா.5:17)

758. ஒளி எதை விளைவிக்கிறது?
நன்மை, நீதி,உண்மை (கலா.5:17)

759. திருமணமான பெண்கள் தங்கள் கணவருக்கு எப்படி பணிந்திருக்க வேண்டும்?
ஆண்டவருக்குப் பணிந்திருப்பது போல (கலா.5:22)

760. திருமணமான ஆண்கள் தங்கள் மனைவியரை எவ்வாறு அன்பு செய்ய வேண்டும்?
கிறிஸ்து திருச்சபை மீது அன்பு செலுத்தியது போல (கலா.5:25)

761. கணவர்கள் தங்கள் மனைவியை எப்படி கருத வேண்டும்?
தம் சொந்த உடலென கருதவேண்டும். (கலா.5:28)

762. யாரிடம் எம் மன்றாட்டுக்களை எழுப்ப வேண்டும்?
இறை தந்தையிடம் (கலா.6:18)

763. உரோமர்களின் கடவுள் யார்?
ஜீப்பிட்டர், மார்ஸ், எம்பரர்

764. புனித பவுல் கூறும் தாய் நாடு எது?
விண்ணகம் (பிலி.3:20)

765. கட்புலனாகாத கடவுளின் சாயல் யார்?
இயேசு கிறிஸ்து (கொலோ.1:15)

766. பவுல் திருத்தொண்டன் ஆனது எதற்கு?
நற்செய்தியை போதிப்பதற்கு (கொலோ.1:23)

767. மனித கையால் செய்யாத விருத்த சேதனம் எது?
திருமுழுக்கு (கொரி.2:11)

768. பவுல் எதென்ஸ் நகரில் பணி செய்யும்படி யாரை அனுப்பினான்?
திமோத்தேயுவை (1தெ.3:3)

769. விசுவாசத்தின் அடிப்படையில் பவுலின் உண்மையான பிள்ளை யார்?
திமோத்தேயு (1திமோ.1:1)

770. கடவுளின் திட்டம் எதனை அடிப்படையாகக் கொண்டது?
விசுவாசத்தை (1திமோ.1:4)

771. எதனை முறைப்படி பயன்படுத்த வேண்டும்?
திருச்சட்டத்தை (1திமோ.1:8)

772. புனித பவுலை வலுவூட்டியவர் யார்?
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து (1திமோ.1:12)

773. கடவுள் பவுலை எதற்கு தகுதியுடையவராகக் கருதினார்?
நம்பிக்கைக்கு (1திமோ.1:12)

774. திருச்சபையின் ஆரம்பத்தில் ஆயர்கள் எவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்டார்கள்?
பரிசுத்த ஆவியின் ஏவுதலால்.

775. கடவுளையும் மனிதரையும் இணைப்பவர் யார்?
இயேசு கிறிஸ்து (1திமோ.2:15)

776. ஆண்டவருக்கு உரித்தானது எது?
மாண்பும், ஆற்றலும் (1திமோ.6:16)

777. மனிதன் யாருக்குரியவராக இருக்க வேண்டும்?
கடவுளின் மனிதனாக (1திமோ.6:11)

778. திமோத்தேயு வலிமை பெற்றது எதனால்?
கிறிஸ்து இயேசுவின் அருளால் (2திமோ.2:1)

779. புனித பவுல் தன் உடன் உழைப்பாளராக குறிப்பிடுவது யாரை?
பிலமோனை (பிலமோன்.1:15)

780. புனித பவுலிடம் பிலமோன் பெற்றுக் கொண்ட கடன் எது?
கிறிஸ்தவ விசுவாசம் (பில.1:15)

781. இறைவன் விரும்பும் நெறி எது?
நீதி (எபி.1:9)

782. நாம் குறிப்பிடும் புதிய உலகை கடவுள் யாருடைய அதிகாரத்துக்கு உட்படுத்தவில்லை?
வானதூதரின் அதிகாரத்துக்கு (எபி.2:5)

783. இயேசு யாரை விட மகிமைக்குரியவர்?
மோசேயைவிட (எபி.3:3)

784. மெல்கிசதேக்கு எந்த நாட்டு அரசன்?
சாலேம்

785. திருத்தூயகத்தில் யார் நுழையலாம்?
தலைமைக்குரு (எபி.9:7)

786. கடவுளின் நண்பர் என அழைக்கப்படுவர் யார்?
ஆபிரகாம் (எபி.2:21)

787. பழைய ஏற்பாட்டில் எளிய நிலைக்குட்பட்டவர் யார்?
எலியா (எபி.5:17)

788. அழியாத அலங்காரம் எது?
பணிவும் அமைதியும் (1பேது.3:4)

789. திரளான பாவங்களைப் போக்குவது எது?
அன்பு (1பேது.4:8)

790. ஆண்டவரின் நாள் யாரைப் போல வரும்?
திருடனைப் போல வரும் (1பேது.3:10)

791. வாழ்வு அளிக்கும் வார்த்தை யார்?
கடவுள் (1,2,3 யோவான்.1)

792. யோவான் எழுதிய 3ம் திருமுகம் யாருக்கு எழுதப்பட்டது?
"காயு" எனப்படும் தனிப்பட்ட மனிதருக்கு (1,2,3 யோவா.1:1)

793. திருவெளிப்பாடு நூலை எங்கிருந்து எழுதினார்?
பத்மு என்ற தீவில் நாடு கடத்தப்பட்டிருந்த போது எழுதினார்
(1திரு.1:9)

794. திருவெளிப்பாட்டில் வரும் ஆசியா இப்போது எந்த நாட்டைக் குறிக்கும்?
துருக்கி நாடு

795. வெண்ணாடை என்பதன் பொருள் என்ன?
★தூய்மை, ★மகிழ்ச்சி,★ வெற்றி என்பவற்றைக் குறிக்கின்றது

796. ஒளியின் கனிகள் எவை?
★ நன்மை,★ நீதி, ★உண்மை

797. "ஆமேன்" என்பதன் தமிழ் கருத்து யாது?
"அது சரியானது" என்பதாகும்.

798. வெள்ளைக் குதிரை எதைக் குறிக்கும்?
வெற்றி (திரு.6:2)

799. குருத்தோலை எதன் அடையாளச் சின்னம்?
வெற்றியின் அடையாளச் சின்னம் (திரு.7:9)

800. ஏழு வானதூதர்களும் யாவர்?
★மிக்கேல் ★ஊரியேல் ★கபிரியேல் ★செராகுவேல்
★இரபேல் ★ரேமியேல் ★இராகுவேல்

801. "மிக்கேல்" என்பதன் பொருள் யாது?
இறைவனுக்கு நிகர் யார் என்பதாகும்.

802. "கபிரியேல்" என்பதன் பொருள் யாது?
இறைவனின் வல்லமை என்பதாகும்.

803. "இராகுவேல்" என்பதன் பொருள் யாது?
இறைவனின் நண்பர் என்பதாகும்.

804. "ஊரியேல்" என்பதன் பொருள் யாது?
இறைவனின் அனல் என்பதாகும்.

805. "செராகுவேல்" என்பதன் பொருள் யாது?
இறைவனின் அரசர் என்பதாகும்.

806. "ரேமியேல்" என்பதன் பொருள் யாது?
இறைவனின் இடி என்பதாகும்.

807. கடவுளின் கோவில் எதற்கு அடையாளம்?
கடவுளின் திருச்சபைக்கு

808. இறை மக்களுக்கு இருக்க வேண்டியது எது?
மன உறுதி.

809. அகரமும் நகரமும் முதலும் இறுதியும் நானே என்றவர் யார்?
இயேசு கிறிஸ்து (திரு.22:13)

810. ஒளி படைத்த விடிவெள்ளி யார்?
இயேசு கிறிஸ்து (திரு.22:16)

811. தாவீதின் குலக்கொழுந்தும் வழித்தோன்றலும் யார்?
இயேசு கிறிஸ்து (திரு.22:17)

812. ஆண்டுதோறும் பன்னிருமுறை கனிதரும் மரம் எது?
வாழ்வு தரும் மரம் (திரு.22:2)

813. "உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது" என்று கூறியவர் யார்?
புனித பவுல்.

## திருச்சபையும் இலங்கைத் திருச்சபையும்

814. பரிசுத்த திருச்சபையின் பிரதானமான பண்புகள் எவை?
★ஏகம் ★பரிசுத்தம்
★கத்தோலிக்கம் ★அப்போஸ்தலிக்கம்.

815. முதியோரை மதித்தல் பற்றி பத்துக் கட்டளைகளில் கூறப்பட்டிருப்பது எது?
பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக

816. ஞாயிற்றுக் கிழமையை உல்லாச பொழுது போக்கில் செலவிடுவது இறைவனின் எத்தனையாம் கட்டளைக்கு எதிரானது?
மூன்றாம் கட்டளைக்கு எதிரானது.

817. "என் வீட்டில் எவனும் மற்றவனைத் தவறாகப் பேசக்கூடாது" என எழுதியவர் யார்?
புனித அகஸ்ரின்

818. திருச் சட்டத்தில் நிறைவு எதுவென புனித பவுல் குறிப்பிடுகின்றார்?
அன்பு

819. வாழ்க்கைக்கு அத்தியாவசியமான இறைவனின் கொடைகள் எவை?
★சூரியஒளி, ★மழை, ★செடி, ★வனவிலங்கு,
★காற்று, ★மரம் ★கொடிகள்

820. 1978ல் குறுகிய காலம் பாப்பரசராக பதவி வகித்தவர் யார்?
திருத்தந்தை முதலாம் அருளப்பர் சின்னப்பர்.

821. திருத்தந்தை முதலாம் அருளப்பர் சின்னப்பர் எத்தனை நாட்கள் பாப்பரசராக பதவி வகித்தார்?
34 நாட்கள்

822. பிள்ளைகளின் பாதுகாவலராக போற்றப்படும் புனிதர் யார்?
புனிதர் டொமினிக்

823. இளைஞர்களுக்கு பாதுகாவலராக விளங்குபவர் யார்?
புனித ஞானப்பிரகாசியார்.

824. சிக்கனத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் யார்?
திருத்தந்தை பத்திநாதர் (பயஸ்)

825. "வறியவர்களுக்கு ஏதும் கொடுப்பது அவர்களுக்குரியதைத் திருப்பிக் கொடுப்பதாகும்" என்று கூறியவர் யார்?
புனித அப்புறோசியார்

826. வறியவர்களின் நன்மைக்காக சபைகளை ஏற்படுத்தியவர் யார்?
பெட்றிக் ஓசான்னம் அடிகள்

827. வறியோர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட சபை எது?
"புனித வின்சன் டி போல் சபை"

828. "நல்லாயன் சபை" எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
1835 இல்

829. "நல்லாயன் சபையை" ஆரம்பித்தவர் யார்?
அன்னை யூப்பிரேசியா பெலற்றியா

830. "செபமாலைக் கன்னியர் சபை" ஸ்தாபகர் யார்?
அருட்தந்தை பி.ஏ.தோமஸ் அடிகள்

831. "செபமாலைக் கன்னியர் சபை" எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?
1948 செப்ரெம்பர் 8ம் திகதி

832. "திருக்குடும்ப கன்னியர் சபை" எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?
1820 இல்

833. "திருக்குடும்பக் கன்னியர் சபையை" ஆரம்பித்தவர் யார்? எங்கே?
ஆசாரத்திற்குரிய பீற்றர் வியன் பிறுனோ என்பவர் பிரான்சில், "போர்டோ" என்னுமிடத்தில் ஆரம்பித்தார்

834. "புனித வளனார் துறவற சபையை" ஸ்தாபித்தவர் யார்?
பேராயர் கிறிஸ்தோபர் பொஞ்சீன்

835. புனித வளனார் சபை எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?
1864 இல் யாழ்ப்பாணத்தில்.

836. "அன்புப் பணியாளர் சபையை" ஸ்தாபித்தவர் யார்?
அன்னை திரேசா.

837. "அப்போஸ்தலிக்க கார்மேமல் சபையை" ஸ்தாபித்தவர் யார்? எப்போது?
அன்னை வெரோனிக்கா. 1868 இல்

838. கிளரீசியன் சபையின் பின் பெயர் என்ன?
மரியாவின் மாசற்ற இருதய மைந்தர்கள் கிளரீசியன் சபை

839. கிளரீசியன் சபை ஸ்தாபகர் யார்? எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?
புனித அன்ரனி மேரி கிளாரட் 1849 யூலை 16ம் திகதி.

840. திருவுளச்சபையின் ஸ்தாபகர் யார்?
அருட்பணிலூயி மரிய பரான்அ.ம.தி.

841. "திருவுளச்சபை" எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?
1958 யூலை 2

842. "திருச்சிலுவை கன்னியர் சபை" யாரால் ஸ்தாபிக்கப்பட்டது?
அருட்திரு தியோசியஸ் புளோரன்டினி அடிகளார்,
அருட்சகோதரி பேர்னாடா செமிசாட்னர் இணைந்து.

843. திருச்சிலுவைக் கன்னியர் சபை எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?
1844 இல்.

844. அமல மரித்தியாகிகள் சபையின் ஸ்தாபகர் யார்?
புனித இயூயின் டி மசனெட்.

845. "அமல மரித்தியாகிகள் சபை" எப்போது ஸ்தாபிக்கப்பட்டது?
1826 பெப்ரவரி 17ம் திகதி.

846. யாழ்ப்பாண மேற்றிராசன சங்கம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
1927 ம் ஆண்டு.

847. செபமாலை தாசர் ஆச்சிரமம் எங்கே? எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
தோலகட்டியில், 1928 பெப்ரவரி 28ம் திகதி.

848. செபமாலை தாசர் சபையின் ஆச்சிரமம் யாரால் உருவாக்கப்பட்டது?
அன்ரனி தோமஸ் அடிகள்.

849. திவ்விய நற்கருணை வழியாக நாம் பெறுவது எது?
நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருவுடலையும் திரு இரத்தத்தையும் ஆன்ம உணவாகப் பெற்றுக்கொள்கிறோம்.

850. ஆன்ம உணவைப் (திவ்விய நற்கருணை) பெறுதற்கு முன் எவ்வளவு நேரம் சாப்பிடாமல் (உபவாசம்) இருக்க வேண்டும்?
ஒரு மணித்தியாலம் சாப்பிடாமல் இருக்க வேண்டும்.

851. "தொழிலாளர் சம்மேளனம்" என்னும் சுற்று மடலை எழுதியவர் யார்?
13ம் சிங்கராயர் பாப்பரசர்.

852. இலங்கையில் புனித மரியாளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட தேவாலயங்கள் இரண்டு தருக?
★தேவத்தை லங்கா மாதா ஆலயம்
★மடுத்திருப்பதி செபமாலை மாதா ஆலயம்.

853. திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் எப்போது இலங்கை வந்தார்?
1995 ஜனவரி 20

854. "எனது ஆன்மா இறைவனில் மகிழ்ச்சியும் ஆறுதலும் காணும் வரை அமைதியின்றியே இருக்கும்" என்று கூறியவர் யார்?
புனித அகுஸ்தினார்.

855. "நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாம் கடவுளுடைய மகிமைக்கெனச் செய்யுங்கள்" என்று கூறியவர் யார்?
புனித பவுல்.

856. முதன் முதல் இலங்கைக்கு வந்த திருத்தந்தை யார்?
6ம் சின்னப்பர்

857. ஏழு தலையாய பாவங்களையும் தருக?
★அகங்காரம் ★மோகம் ★போசனப்பிரியம்
★கோபம் ★சோம்பல ★காய்மகாரம்
★உலோபம்(கஞ்சத்தனம்)

858. இலங்கையில் "வேத சாட்சிகளின் தீவு" என அழைக்கப்படும் இடம் எது?
மன்னார்.

859. திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டு எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை எவை?
ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
★திருவருகைக் காலம் ★பாஸ்கா காலம் ★தவக்காலம்
★கிறிஸ்து பிறப்புக் காலம் ★பொதுக் காலம்

860. போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் பணியாற்றிய துறவற சபைகளைக் குறிப்பிடுக?
★பிரான்சிஸ்கன் சபை ★அகுஸ்தினார் சபை
★இயேசு சபை ★டொமினிக்கன் சபை

861. "டொண் யுவான்" என்ற பெயரில் கத்தோலிக்க நெறியைத் தழுவிய அரச பிரதிநிதி யார்?
தர்மபாலன்.

862. திருச்சபையின் கட்டளைகள் எவை?
★ ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் முழுப்பூசையில் பங்குபற்ற வேண்டும்.
★ வருடத்திற்கு ஒருமுறையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வது.
★ பாஸ்கா காலத்தில் ஒரு முறையாவது நற்கருணை உட்கொள்வது.
★ மாமிசத் தவிர்ப்பு நாட்களில் மாமிசத் தவிர்ப்பும் நோன்பு நாட்களில் நோன்பும் அனுசரிக்க வேண்டும்.
★ விலக்கப்பட்ட காலத்திலும் குறைந்த வயதிலும் விக்கினமுள்ள உறவு முறையாரோடும் திருணம் செய்யாதிருப்பது.
★ திருச்சபையின் பணிக்கு இயன்றளவு உதவி செய்ய வேண்டும்.

863. இலங்கையில் ஒல்லாந்தர் காலத்தில் "சின்ன உரோமை" என அழைக்கப்பட்ட இடம் எது?
சில்லாலை

864. இலங்கையில் முழுமையான மதச் சுதந்திரத்தை அளித்தவர் யார்? எப்போது?
தோமாஸ் மெய்ட்லான்ட், (1806 மே 27 இல்)

865. "இலங்கையில் கத்தோலிக்க கல்வியைப் பற்றிய சில வார்த்தைகள்" என்ற நூலை வெளியிட்டவர் யார்?
கிறிஸ்தோபர் பொஞ்சின் அடிகளார்.

866. இலங்கையில் கிறிஸ்தவ சபையை தேசிய மயமாக்கும் முயற்சியில் உழைத்தவர்கள் யார்?
- ☆ வணக்கத்திற்குரிய பொஞ்சின் ஆண்டகை.
- ☆ ஆயர் தோமஸ் கருதினால் கூரே ஆண்டகை.
- ☆ ஆயர் எட்மன் பீரிஸ் ஆண்டகை.
- ☆ ஆயர் எஸ் பி. பெரேரா ஆண்டகை.
- ☆ சுவாமி ஞானப்பிரகாசர்.
- ☆ ஆயர் லக்தாஸ் டி மெல்.

867. இலங்கையின் முதல் சுதேச சிங்கள பேராயர் யார்?
தோமஸ் கருதினால் கூரே ஆண்டகை.

868. இலங்கையிலுள்ள புனித மாட்டீனார் குருமடங்கள் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
1869ம் இல்

869. இலங்கை வேதாகமச் சங்க முதல் தலைவர் யார்?
றொபேட் பிறவுண்றிக் (1812)

870. இலங்கையின் முதலாவது ஆயர் மன்றம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
1899ம் ஆண்டு ஐப்பசி 3ம் திகதி.

871. இலங்கைக்கு முதல் முதல் வந்த மிசநெறி சபை எது?
பிரான்ஸிஸ்கன் சபை.

872. எமது நாட்டில் ஒல்லாந்தர் காலத்தில் இறைவனை விசுவாசத்துடன் செபித்து மழை பொழியச் செய்தவர் யார்?
யோசவாஸ் அடிகள்.

873. "இலங்கையயின் அப்போஸ்தலன்" என்ற சிறப்புப் பெயரினால் அழைக்கப்படுபவர் யார்?
யோசவாஸ் அடிகள்.

874. யோசவாஸ் அடிகளுக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் எப்போது வழங்கப்பட்டது?
1995 ஜனவாரி 21ம் திகதி.

875. நல்லாயன் சபைக் கன்னியர் எப்போது இலங்கைக்கு வந்தனர்?
1869 இல்.

876. அனுராதபுரத்தில் 1500 ம் ஆண்டுக்கு முன்னர் காணப்பட்ட கிறிஸ்தவர்கள் யாவர்?
நெஸ்தோரிய கிறிஸ்தவர்கள்.

877. மன்னாரில் 700 வேதசாட்சிகள் யாரால் கொலை செய்யப்பட்டனர்?
சங்கிலி மன்னனின் (7ம் செகராஜ சேகரன்) படை வீரர்களால்.

878. மன்னாரில் 700 வேதசாட்சிகளும் எத்தனையாம் ஆண்டு கொலை செய்யப்பட்டனர்?
1544ம் ஆண்டு.

879. ஒல்லாந்தர் இலங்கைத் திருச்சபையை எவ்வாறு துன்புறுத்தினார்கள்?
★ போர்த்துக்கேய குருக்கள் போர்த்துக்கேய படையினருடன் வெளியேற்றப்பட்டனர்.
★ கத்தோலிக்க தேவாலயங்கள் அழிக்கப்பட்டன.
★ கத்தோலிக்க சுருபங்கள் உடைக்கப்பட்டன.
★ குருக்களுக்கு ஆதரவு அளிப்பவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும் சட்டங்கள்உருவாக்கப்பட்டன.
★ கத்தோலிக்கப் பாடசாலைகள் பறிமுதல் செய்யப்பட்டு, புரட்டஸ்தாந்து பாடசாலைகள் ஆக்கப்பட்டன.
★ புரட்டஸ்தாந்து மதத்தைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்ட ஞானஸ்நானம், திருமணங்கள் மட்டுமே அங்கீகரிக்கப்பட்டன.

880. யாழ் மறை மாவட்டத்தில் தற்போது உள்ள ஒரே ஒரு தனியார் கத்தோலிக்கப் பாடசாலை எது? இது எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
புனித பத்திரிசியார் கல்லூரி 1850ம் ஆண்டு.

881. முதன் முதல் மடுமாதா சுரூபத்திற்கும் பாலனுக்கும் முடி சூட்டி வைத்தவர் யார் எப்போது?
பேராயர் அந்தோனி சுடேர் (1924 யூலை 2ம் திகதி)

882. பிச்சைக்காரன் வேடம் பூண்டு கத்தோலிக்க மதத்தைப் பரப்பியவர் யார்?
யோசவாஸ் அடிகள்.

883. பசாம் (வியாகுலப் பிரசங்கம்) நூலை இயற்றியவர் யார்?
யாக்கமே கொன்சால்வாஸ் அடிகள்.

884. "இந்தியாவின் அப்போஸ்தலர்" என்று சிறப்பாக அழைக்கப்படுவர் யார்?
புனித பிரான்சிஸ் சவேரியார்.

885. முன்னர் "வெற்றி மாதா" என்று அழைக்கப்பட்ட யாத்திரை தலம் தற்பொழுது எப்பெயரால் அழைக்கப்படுககிறது?
யாழ் - புதுமை மாதா.

886. எளியோருக்கு இரக்கப்பணி செய்த அன்னை யார்?
அன்னை தெரேசா.

887. அன்னை தெரேசாவால் ஆரம்பிக்கப்பட்ட நோயாளர் மண்டபங்கள், தொழு நோயாளர் விடுதிகள், அனாதை மடங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
ஏறத்தாழ 380 ஆகும்.

888. தொழு நோயால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக செபித்து இறுதியில் தானே தொழுநோயால் பீடிக்கப்பட்டு மரணித்தவர் யார்?
டேமியன் அடிகளார்.

889. தியான சம்பிரதாய சபையின் மறுபெயர் என்ன?
ஒரிற்றோரியன் சபை.

890. "தமிழ் சிங்கள கத்தோலிக்க இலக்கியத்தின் தந்தை" எனப்படுவர் யார்?
யாக்கமே கொன் சால்வஸ் அடிகள்.

891. மறை பரப்புப் பணியை ஆசிய நாடுகளில் பரப்புவதற்கு உழைத்த புனிதர் யார்?
புனித பிரான்சிஸ் சவேரியார்.

892. நற்பண்புகளுள்ள ஒருவரைத் தனது நண்பராகக் கொண்டு: உறவாடியதன் மூலம் தனது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்ட புனிதர் யார்?
புனித பிரான்சிஸ் சவேரியார்.

893. மலாக்காவில் அடக்கம் செய்யப்பட்டு உடல் அழியாமல் இருந்தமையால் வெளியே எடுக்கப்பட்டு மீண்டும் கோவாவில் அடக்கம் செய்யப்பட்டும், இன்று வரை அழியாமல் உள்ள உடல் எந்தப் புனிதருடையது?
புனித பிரான்சிஸ் சவேரியாருடையது.

894. "அவனியில் அமைதி" என்னும் சுற்றுமடலை எழுதியவர் யார்?
திருத்தந்தை 23ம் அருளப்பர்.

895. வேதகாவியம், தேவவேத புராணம், தேவநீதி போன்ற நூல்களை எழுதியவர் யார்?
யாக்கமே கொன்சால்வஸ் அடிகள்.

896. "முத்தூர் ஒளி விளக்கு" என புகழ் பெற்ற முதல் சிங்களப் பேராயர் யார்?
அதி.வண எட்மன் பீரிஸ் ஆண்டகை.

897. "மரியாள் மாசின்றி உற்பவித்தாள்" என்ற விசுவாச உண்மை யாரால் எப்போது பிரகடனப்படுத்தப்பட்டது?
திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதரால் 1854ம் ஆண்டு.

898. இலங்கை எத்தனை ஆண்டுகள் கொச்சின் மறை மாவட்டத்தின் கீழ் இருந்தது?
ஏறக்குறைய 275 ஆண்டுகள்.

899. இலங்கையின் முதல் கத்தோலிக்க வார ஏடு எது?
பாதுகாவலன்.

900. பாதுகாவலன் பத்திரிகை எப்போது முதன் முதல் வெளி வந்தது?
1876 பெப்ரவரி 19 இல்.

901. இலங்கையில் கல்வின் மதத்தைப் பரப்புவதில் முன்னின்று செயற்பட்ட ஒல்லாந்த பாதிரியார் யார்?
பிலிப் பல்தேவுஸ் பாதிரியார்.

902. இலங்கைக்கு விஜயம் செய்த இரு திருத்தந்தையர்களும் யாவர்? எப்போது வந்தனர்?
★ திருத்தந்தை 6ம் சின்னப்பர் (1970 டிசம்பர் 4ம் திகதி)
★ திருத்தந்தை 2ம்அருள் சின்னப்பர் (1995 ஜனவரி 20ம் திகதி)

903. போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்த கிறிஸ்தவ இலக்கியங்கள எவை?
★ அம்மானை
★ ஞானப்பள்ளு
★ திருச்செல்வர் காவியம்
★ திருச்செல்வர் அம்மானை.

904. பிரித்தானியர் காலத்தில் கிறிஸ்தவ மகளிர் கல்விக்கு உழைத்த கிறிஸ்தவ சபைகள் எவை?
★ பப்ரிஸ் சபையினர்
★ மெதடிஸ்ட்சபையினர்
★ திருக்குடும்ப கன்னியர் சபை
★ நல்லாயன் சபை

905. "அரச உதவி பெறும் பாடசாலைகளின் தந்தை" என்று அழைக்கப்படுவர் யார்?
அதி.வண. பொஞ்சின் ஆண்டகை.

906. "நற்கருணையின் பாப்பு" என அழைக்கப்படுபவர் யார்?
திருத்தந்தை புனித பத்தாம் பத்திநாதர்.

907. திருவுளச் சபையினர் யாழ் மறை மாவட்டத்தில் தமக்கென ஓர் இல்லத்தை அமைத்து சிறப்பாக பணிபுரிவதற்கு அடித்தளமிட்டவர் யார்?
மறைந்த ஆயர் அதி.வண.எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை.

908. யாழ்ப்பாணத்தில் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியை ஸ்தாபித்தவர் யார்?
பேரருட் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை.

909. இஸ்ராயேல் மக்களுடைய வராற்றில் கிறிஸ்தவ மதம் எப்போது எந்த மன்னனால் அங்கீகரிக்கப்பட்டது?
கி.பி 380 இல் தியோடேசியஸ் அரசனால்.

910. கிறிஸ்தவ பொது நிலையினரின் கடமைகள் எவை?
- ★ இறைவனில் உறுதியான விசுவாசத்துடன் வாழுதல்.
- ★ முழு உள்ளத்தோடும் பரம பிதாவை அன்பு செய்தல்.
- ★ பிறருக்கு முன் மாதிரிகையாக வாழுதல்.
- ★ மாணவர்களுக்கு மறை அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.
- ★ நோயாளிகளை தரிசித்து ஆறுதல் கூறுதல்.
- ★ சமாதானமாக வாழுதல்.
- ★ சமூக நீதி, மனித உரிமைகளைப் பேணுதல்.
- ★ அருட்சாதனங்களைப் பெற்றுக் கொள்வதற்காக விசுவாசிகளை ஆயத்தப்படுத்தல்.

911. 2000 - யூபிலி ஆண்டில் மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு. தோமஸ் ஆண்டகை அவர்களால் யாழ் மறை மாவட்டத்தில் யாத்திரை தலங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஆலயங்கள் எவை?
- ★ புதுமை மாதா ஆலயம் - யாழ்ப்பாணம்
- ★ புனித அந்தோனியார் ஆலயம் - மானிப்பாய்
- ★ லூர்த்து மாதா ஆலயம் - தும்பளை
- ★ ஆரோக்கிய மாதா ஆலயம் - முகமாலை
- ★ சிந்தாத்திரை மாதா ஆலயம் - சாட்டி
- ★ பற்றிமா மாதா ஆலயம் - பண்டத்தரிப்பு

912. மெய்விவாகம் எக்காலங்களில் திருச்சபையால் விலக்கப்பட்டுள்ளது?
தபசு காலத்தில்.

913. நமது விசுவாசத்தின் காவலனாய் இருப்பது எது?
திருச்சபை.

914. கிறிஸ்தவ சமுதாயத்தை புனிதப்படுத்தும் பொறுப்பைக் கொண்டது எது?
திருச்சபை.

915. "வேதாகமத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியான்" என்று கூறியவர் யார்?
புனித ஜெறோம்.

916. "அன்னையும் ஆசிரியையும்" என்ற சுற்று மடலை எழுதியவர் யார்?
திருத்தந்தை 23ம் அருளப்பர்.

917. இவ் உலகில் இறையரசின் அடையாளமாக விளங்குவது எது?
திருச்சபை.

918. திருச்சபையின் முக்கிய பணி எது?
நற்செய்தியை மக்களுக்கு போதிப்பது.

919. அன்னைத்திரேசா எத்தனையாம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார்?
1979ம் ஆண்டு

920. இறைவனின் திட்டத்தை நிறைவேற்ற மக்களை ஊக்குவிப்பது எது?
திருச்சபை.

921. "மக்கள் முன்னேற்றம்" என்ற சுற்று மடலை எழுதிய திருத்தந்தை யார்?
திருத்தந்தை 6ம் சின்னப்பர்.

922. பரிசுத்த ஆவியின் கொடைகள் எவை?

★ஞானம் ★தெய்வபயம் ★பக்தி ★புத்தி
★திடம் ★அறிவு ★விமரிசை

923. பரிசுத்த ஆவியின் கனிகள் எவை?

★அன்பு ★பொறுமை ★நம்பிக்கை
★மகிழ்ச்சி ★பரிவு ★கனிவு
★அமைதி ★நன்னயம் ★தன்னடக்கம்

924. அகவொளி நிலையத்தின் பணிகள் எவை?

★ திருமண ஆயத்தப் பயிற்சி நெறி வழங்குதல்.
★ திருமண வாழ்வை நிறைவாக்கும் நெறியை வழங்குதல்.
★ குடும்ப ஆற்றுப்படுத்தல்.
★ குழு ஆற்றுப்படுத்தல்.
★ ஆற்றுப்படுத்துனரைப் பயிற்றுவித்தல்.
★ போயா நாள் கருத்தரங்கு நடாத்துதல்.
★ இயற்கை முறை குடும்ப நலத்திட்டம்.
★ குடும்பங்களுக்கான சிறப்புக் கருத்தரங்குகள்.
★ திருமண தகவல் தொடர்பு.
★ பாடசாலை மாணவருக்கான ஆளுமை.
★ விழுமியக் கல்வி வழங்குதல்.
★ கிறிஸ்தவ குடும்ப இயக்கம் என்பவைகள் ஆகும்

925. கிறிஸ்தவ உழைப்பாளிகளுக்கு வழிகாட்டியாக விளங்கும் புனிதர் யார்?
புனித யோசேப்பு (சூசையப்பர்).

926. நற்செய்தித் தூதுவர்களுக்குப் பாதுகாவலராக விளங்கும் புனிதர் யார்?
சின்னத்திரேசம்மாள்.

927. மனித முன்னேற்ற நடுநிலையத்தின் பணிகள் எவை?
★ கத்தோலிக்க திருச்சபையின் சமூகப் பணிகள் முன்னெடுத்துச் செல்வது.
★ சமூக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல்
★ குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்.
★ அகதிகள் நிவாரணம் வழங்குதல்.
★ இல்லிட வசதி அமைத்துக் கொடுத்தல்.
★ அகதிகள் புனர்வாழ்வு அளித்தல்.
★ சுயதொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தல்.
★ இயற்கை அழிவுகளில் நிவாரணம் வழங்குதல்.
★ கடன் வழங்கல்.
★ சுகாதாரப் பயிற்சி வழங்குதல்.
★ ஆரம்பக்கல்வி வழங்குதல்.
★ இனக்கலவர அழிவுகளில் நிவாரணம் வழங்குதல்.
★ புனர்வாழ்வு என்பவற்றை மக்களுக்காக செயல்படுத்தி வருகின்றது.
★ இனங்களிற்கு இடையே சமாதானத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துகிறது.

## வழிபாடும் மறைக்கோட்பாடுகளும்

928. நிலையான நற்பண்புகள் மூன்றும் எவை?
★நம்பிக்கை ★அன்பு ★விசுவாசம்.

929. திருநீற்றுப் புதனுடன் ஆரம்பமாவது எது?
தவக்காலம்.

930. தூய ஆவியின் கொடைகளினால் நாம் நமது சரீர அடிமைத்தனங்களில் இருந்து எதைப் பெற்றுக் கொள்கின்றோம்?
மீட்பு

931. இறையருளை நாம் எவற்றின் வழியாகப் பெற்றுக் கொள்கின்றோம்?
திருவருட்சாதனங்கள் மூலம்.

932. நாம் அடிக்கடி நினைவு கூர வேண்டியவை எவை?
★மரணம் ★தீர்வை ★மோட்சம் ★நரகம்

933. ஒருவன் பெற்றுக்கொள்ளும் முதல் அருட்சாதனம் எது?
திருமுழுக்கு

934. உடலின் புனித தத்துவத்தைப் பாதுகாக்க யாருடைய உதவியை நாடி செபிக்க வேண்டும்?
மரியன்னையின் உதவியை நாடி செபிக்க வேண்டும்.

935. கத்தோலிக்க திருச்சபையால் கடன் திருநாட்கள் என கொண்டாடப்படுபவை எவை?
★ இறைவனின் அன்னை கன்னிமரிவிழா
★ ஆண்டவரின் திருக்காட்சி விழா
★ ஆண்டவரின் பாஸ்கா விழா
★ ஆண்டவரின் விண்ணேற்பு விழா
★ புனித மரியாளின் விண்ணேற்பு விழா
★ புனித மரியாளின் அமல உற்பவ விழா
★ ஆண்டவரின் பிறப்பு விழா
★ ஆண்டவரின் திருவுடல் திருஇரத்த விழா

936. இறைவனின் அன்னை கன்னிமரிவிழா எப்போது கொண்டாடப்படுகிறது?
ஜனவரி 1

937. தவக்காலம் எப்போது ஆரம்பமாகின்றது?
திருநீற்றுப்புதனுடன்.

938. புனித மரியாளின் விண்ணேற்பு விழா எப்போது கொண்டாடப் படுகிறது?
ஆகஸ்ட் 15

939. புனித மரியாளின் அமல உற்சவ விழா எப்போது கொண்டாடப்படுகிறது?
டிசம்பர் 8

940. ஆண்டவரின் பிறப்பு விழா எப்போது கொண்டாடப்படுகிறது?
டிசம்பர் 25

941. உண்ணா நோன்பு நாட்கள் எவை?
☆திருநீற்றுப் புதன் ☆பெரிய வெள்ளி

942. இறை மக்கள் பெற்ற மூவித பணிகள் எவை?
☆அரச பணி ☆குருத்துவப்பணி ☆இறைவாக்குப்பணி

943. ஆன்மாவைச் சார்ந்த இரக்கச் செயல்கள் எவை?
☆ பாவிகளை மனந்திருப்புதல்.
☆ அறிவினர்களுக்கு அறிவூட்டுதல்.
☆ சந்தேகம் உள்ள இடத்தில் நம்பிக்கையை உருவாக்குதல்.
☆ நிந்தை அவமானங்களை பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளல்
☆ பிழைகளை மன்னித்தல்.
☆ வாழ்வோருக்காகவும் இறந்தோருக்காகவும் மன்றாடுதல்.
☆ துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதல் அளித்தல்.

944. உடலைச் சார்ந்த இரக்கச் செயல்கள் எவை?
☆பசித்தவர்களுக்கு உணவளித்தல்.
☆ தாகமாய் இருப்பவர்களுக்கு குடிக்கக் கொடுத்தல்.
☆ ஆடை அற்றவர்களுக்கு ஆடை கொடுத்தல்.
☆ இல்லிடம் அற்றவர்களுக்கு உதவுதல்.
☆ நோயாளருக்கு ஆறுதல் கூறுதல்.
☆ சிறைப்பட்டவரை தரிசித்தல்.
☆ இறந்தவர்களை அடக்கம் செய்தல்.

945. காலத்தின் அடையாளங்களை முழுமையாக விளங்கிக் கொண்டவர் யார்?
இயேசு கிறிஸ்து

946. எமது பூரணத்துவத்திற்கு வழிவகுப்பது எது?
முதியோரை மதித்து நடத்தல்.

947. சொத்துக்கள் யாவும் யாருக்குச் சொந்தம்?
இறைவனுக்கு

948. புனித அம்புறோசியார் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
மிலான்.

949. பாஸ்கா மறைபொருளோடு நம்மை இணைப்பவை எவை?
திருவருட்சாதனங்கள்.

950. புதிய ஏற்பாட்டின் குரு யார்?
இயேசு கிறிஸ்து

951. புதிய பிறப்பிற்கு வழிவகுக்கும் திருவருட்சாதனம் எது?
திருமுழுக்கு

952. நாம் முதிர்ச்சி அடைந்த நிலையில் பெறும் திருவருட்சாதனம் எது?
உறுதிப்பூசுதல்.

953. சகல மக்களினதும் விசுவாசத்தைப் பாதுகாப்பது எது?
திருச்சபை.

954. திருச்சபையின் நிர்வாக கட்டமைப்பைக் கூறுக?
☆ பாப்பரசர் ☆ கருதினால் மார்கள் ☆ ஆயர்கள்
☆ குருக்கள் ☆ அருட்சகோதரர்கள் ☆ பொது நிலையினர்

955. இறைவன் எமக்குத் தந்த விலைமதிக்க முடியாத செல்வம் எது?
உயிர்

956. சுகமளிக்கும் திருவருட்சாதனங்கள் எவை?
☆ஒப்புரவு, ☆நோயிற்பூசுதல்.

957. சமுதாயத்தை நடத்த அர்ப்பணமாகும் திருவருட்சாதனங்கள் எவை?
☆மெய்விவாகம், ☆குருத்துவம்.

958. இறை வாழ்வில் ஊட்டம் பெற வழிவகுக்கும் திருவருட்சாதனம் எது?
தேவநற்கருணை

959. பூரண சுகத்தைப் பெற்றுத் தரும் திருவருட்சாதனம் எது?
நோயிற்பூசுதல்.

960. பாவமன்னிப்பு அளிக்கும் திருவருட்சாதனம் எது?
ஒப்புரவு.

961. சமூக வளர்ச்சியில் சேவை செய்ய அடியெடுத்து வைக்கும் போது இறைவனின் வல்லமையைப் பெற்றுத் தரும் திருவருட்சாதனம் எது?
குருத்துவம்.

962. பதுவைப் புனிதர் எனப்படுபவர் யார்?
புனித அந்தோனியார்.

963. திவ்விய நற்கருணை எனும் திருவிருந்தில் நாம் பங்கு கொள்வதால் நமக்கு கிடைப்பவை எவை?
☆ பாவத்தை வெல்லுவதற்கு சக்கி கிடைக்கிறது.
☆ கிறிஸ்துவின் அர்ப்பணவாழ்வில் பங்குகொள்கிறோம்.
☆ ஆன்மீக அமைதியை பெற்றுக் கொள்கிறோம்.
☆ மறைபரப்புப் பணியில் பங்கு கொள்கிறோம்.
☆ இறைவனின் கொடைகளால் நிரப்பப்படுவோம்.
☆ உண்மையான அன்பு உள்ளவனாக வாழ்வோம்.
☆ ஆன்மீக வாழ்வில் ஊட்டம் பெறுவோம்.
☆ ஒற்றுமையாக சேர்ந்து செயற்படுவோம்.
☆ மற்றவருக்காக நம்மை அர்ப்பணிக்கும் சக்தியை பெறுவோம்.

964. இறைவனின் கொடைகளைப் பெறக்கூடிய வழிவகைகள் எவை?
☆ திருவருட்சாதனங்கள் ☆ செபமும் தியானமும்
☆ புண்ணிய கிரியைகளைச் செய்தல் மூலம் இறைவனின் கொடைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

965. மன்னிப்பை பெறுதற்கு அவசியமானவை எவை?
☆ தாழ்ச்சி ☆ பொறுமை

966. எத்திருவருட்சாதனம் மூலம் மன அமைதியைப் பெறுவதோடு உடல் சுகத்தையும் பெறமுடியும்?
நோயிற்பூசுதல்.

967. ஒப்புரவு திருவருட்சாதனத்தைப் பெறுவதால் கிடைப்பவை எவை?
☆ இறைவனிடமிருந்து மன்னிப்பும் இரக்கமும் கிடைக்கிறது.
☆ பாவத்தை எதிர்த்துப் போராட வல்லமை கிடைக்கிறது.
☆ ஆன்ம அமைதியும் சமாதானமும் கிடைக்கிறது.
☆ விசுவாசத்தினூடாக கிறிஸ்து நாதரை சந்திக்க முடிகிறது.

968. திருமணம் எனும் உலகளாவிய அன்பை வெளிப்படுத்தும் திருவருட்சாதனம் எது?
மெய்விவாகம்.

969. குருத்துவ நிலைகள் எவை?
★திருத்தொண்டர்கள் ★குருக்கள் ★ஆயர்கள்

970. செபம் என்றால் என்ன?
இறைதந்தையுடன் உரையாடுவது செபம் ஆகும்.

971. செபத்தில் இருக்க வேண்டிய பண்புகள் எவை?
★இறை புகழ்ச்சி ★இறை ஆராதனை ★வேண்டுதல்
★மன்னிப்பு வேண்டுதல் ★இறைவனின் பாதுகாப்பை நாடுதல்.

972. நாம் எவ்வாறு செபிக்க வேண்டும்?
தாழ்ச்சியுடனும், இடைவிடாமலும் விசுவாசத்துடனும் செபிக்க வேண்டும்.

973. எமது வாழ்வை அர்த்தமுள்ளதாக்கி நல்வழிப்படுத்துவது எது?
செபம்

974. மரியாள் ஏன் தேவ அன்னையாக ஏற்றுக்கொள்ளப்பட்டாள்?
அவள் இறைவனிடம் வைத்திருந்த பக்தியும் இறைவனின் விருப்பத்தை ஏற்றுக்கொண்டதாலேயே மரியாள் தேவ அன்னையாக ஏற்றுக் கொள்ளப்பட்டாள்.

975. நாம் ஒன்று சேர்ந்து செபிக்கக் கூடிய சந்தர்ப்பம் எவை?
★திருப்பலி வேளையில்
★நற்செய்தி வழிபாட்டில்
★செபமாலைசொல்லும் போது
★சிலுவைப்பாதை சொல்லும் போது,
★நற்கருணை வழிபாட்டின் போது
★மரியாள் புனிதர்கள் பக்தி முயற்சிகளில் சேர்ந்து செபிக்கலாம்.

976.முறைசார் செபங்கள் ஐந்து தருக?
★பரலோக மந்திரம் ★விசுவாசப்பிரமாணம்
★மங்களவார்த்தை செபம் ★பரிசுத்த ஆவியின் செபம்
★உஸ்தப மனஸ்தாபச்செபம்

977. முறை சாரா செபங்கள் ஐந்து தருக?
★நோய் சுகம் பெற செபம்
★நன்றாகப் படிக்கச் செபம்
★பயணத்தின் போது நம்மைப் பாதுகாக்க செபம்
★நித்திரை செய்வதற்கு முன் செபம் ·
★உணவு அருந்துவதற்கு முன் செபம்.

978. கிறிஸ்தவ வாழ்வை உறுதியாக வைத்திருப்பதற்கு அவசியமானவை எது?
விசுவாசம்.

979. இவ் உலகில் மூவொரு கடவுளின் அன்பை பிரதிபலிப்பது எது?
குடும்பம்

980. இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையால் 'கடன் திருநாட்கள்' என கூறப்படும் நாட்கள் எவை?
★ இறைவனின் அன்னையாகிய புனித கன்னிமரியாள் பெருவிழா - ஜனவரி 1
★ புனித கன்னிமரியாளின் விண்ணேற்புப் பெருவிழா - ஆகஸ்ட் -15
★ புனித கன்னிமரியாளின் அமலோற்பவப் பெருவிழா -டிசம்பர் -8
★ கிறிஸ்து பிறப்புப் பெருவிழா - டிசம்பர் -25

981. நாம் பெற்றுக் கொண்ட விசுவாசத்தை உறுதிப்படுத்துவது எது?
திடம்.

982. சென்ம பாவத்தை நீக்கும் திருவருட்சாதனம் எது?
திருமுழுக்கு

983. பாவத்தை வெறுத்து தூய வாழ்வு வாழ எமக்குத் தேவையானது எது?
இறையருள்.

984. நமது தேவைகளை எவ்வாறு இறைவனிடம் கேட்கலாம்?
விசுவாசிகளின் மன்றாட்டின் வழியாக

985. பொது வழிபாட்டில் சிறந்த செயற்பாடு எது?
திருப்பலியின் வழியாக கிறிஸ்துவின் கல்வாரிப் பலியில் இணைவதாகும்.

986. எதன் வழியாக நாம் இறைவனின் பிள்ளை ஆகின்றோம்?
திருமுழுக்கு.

987. கிறிஸ்தவன் ஒருவனின் பெந்தக்கோஸ்து நாள் எது?
உறுதி பூசுதல் பெற்ற நாள்

988. திருப்பலியின் இருபெரும் பிரிவுகளும் எவை?
1.இறைவார்த்தை வழிபாடு 2. நற்கருணை வழிபாடு.

989. இறைத்தந்தையின் அன்பிற்கு நாம் எவ்வாறு பிரதி அன்பு காட்டலாம்?
☆ தேவ கட்டளைகளின் படி நடப்பதன் மூலம்
☆ இறை தந்தையை நோக்கி வேண்டுவதன் மூலம்
☆ எமது திறமைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம்
☆ எந்த நேரமும் உண்மை பேசுவதன் மூலம்.
☆ உண்மைக்கு மட்டும் மதிப்பு கொடுப்பதன் மூலமும் பிரதியன்பைக் காட்டலாம்.

990. இறைத் தந்தை எவ்வாறான பண்புகளை நம்மிடம் எதிர்பார்க்கின்றார்?
☆ மன்னித்தல்
☆ குணமாக்குதல்
☆ இரக்கம் காட்டுதல்
☆ சமாதானமாக வாழுதல்
☆ பங்கிட்டுக் கொள்ளுதல்
☆ சமூகத்தினால் ஒதுக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தல் போன்றவைகளை எதிர்பார்க்கின்றார்.

991. நமது ஆராதனையையும் வணக்கத்தையும் எவ்வாறு இறைவனுக்கு வெளிப்படுத்த முடியும்?
☆ ஞாயிறு திருப்பலியில் பங்கு கொள்ளுதல்
☆ மறைக்கல்வி வகுப்புக்களில் பங்கு கொள்ளுதல்
☆ சமயம் சார்ந்த சஞ்சிகைகளை வாசித்தல்
☆ நோயாளரைப் பார்வையிடச் செல்லுதல்
☆ கைவிடப்பட்டோருக்கு உதவுதல்
☆ துன்பப்படுவோருக்கு ஆறுதல் கூறுதல்
☆ ஏழைகளுக்கு இரங்குதல்
☆ பெற்றோருக்கு உதவுதல் மூலம் வெளிப்படுத்தலாம்.

992. திருச்சபையில் வளர்ந்தவர் என்ற மட்டில் சேவையாற்றுவதற்கான பொறுப்பை எமக்குத் தருவது எது?
உறுதிப்பூசுதல்

993. திருமுழுக்கு ஊடாக நாம் எதனைப் பெறுகிறோம்?
புதுவாழ்வை

994. உடல், உலகு, தீயசக்தி ஆகியவற்றினின்று ஒருவனை விடுதலையாக்கும் அருட்சாதனம் எது?
திருமுழுக்கு

995. கடும் நோயுற்றபோது பெறும் திருவருட்சாதனம் எது?
நோயிற் பூசுதல்

996. திருவருட் சாதனங்கள் ஏழும் எவை?
☆ திருமுழுக்கு ☆ ஒப்புரவு ☆ தேவநற்கருணை
☆ உறுதிப்பூசுதல் ☆ குருத்துவம் ☆ நோயிற்பூசுதல்.
☆ மெய்விவாகம்

997. அருட் (குருக்கள்) தந்தையர்களின் சேவைகள் யாவை?
☆ மறை ஆயர்களுக்கு பணிந்து பங்குத் தளங்களில் சேவைபுரிதல்
☆ திருப்பலியை நிறைவேற்றுதல்
☆ திருவருட் சாதனங்களை வழங்குதல்
☆ பங்குத் தளங்களைப் பரிபாலித்தல் புனிதப்படுத்தல்.
☆ நற்செய்தியைப் போதித்தல்.
☆ பொது ஆராதனை வழியாக இறை மகிமைக்கு மக்களை வழிநடத்தல்.
☆ பக்திச்சபைகள், சங்கங்களை இயக்குதல்
☆ பொது நல சேவைகளில் ஈடுபடுதல்
☆ பங்கு மக்களின் ஆன்ம சமூக நலனுக்காக பிறநல சேவைகளில் ஈடுபடுதல்

998. கிறிஸ்தவ குடும்பத்தின் பணிவான பண்புகள் யாவை?
☆ பிரமாணிக்கம் ☆ புரிந்துகொள்ளும் தன்மை ☆ பொறுமை
☆ இரக்கம் ☆ மன்னிக்கும் மனப்பான்மை
☆ ஏற்றுக்கொள்ளும் தன்மை

999. குடும்பத்தில் மனித தொடர்புகள் அழிந்துபோவதற்கான காரணங்கள் எவை?

☆தகாத நூல்கள் ☆விவாகரத்து ☆குடிவெறி
☆பலதாரப்பழக்கம் ☆போதைவஸ்து பாவனை ☆பேராசை
☆சந்தேகம்(அவவிசுவாசம்)
☆தீயதுன்மாதிரிகை
☆உல்லாசப் பிரயாணிகளின் ஒவ்வாத நடத்தை
☆கெட்டபழக்க வழக்கங்களுக்கு அடிமையாதல்

1000. கிறிஸ்தவன் என்ற ரீதியில் சமுதாயத்திலுள்ள அங்கத்கவர்கள் மட்டிலுள்ள கடமைகள் எவை?

☆சக அங்கத்தவர்களுடன் நட்புறவை உருவாக்கிக் கொள்ளுதல்
☆அவர்களின் சட்டப்படியான உரிமைகளைப்பேணுதல்
☆அங்கத்தவர்களின் நலன்களை கருதவேண்டும்.
☆சுயநலம் பாராது பிறரின் நன்மைக்கு உதவுதல்.

# வினா விடைப் பூங்கா

புத்தகத் தொடர்புகளுக்கு

இரா. ரமணன்
ஆசிரியர்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்.

இயக்குனர்
நியூ பிறைற் கல்வி நிறுவனம்
மாட்டின் வீதி
யாழ்ப்பாணம்.

N.குகபரன்
ஆசிரியர்
பாரதி கல்வி நிறுவனம்
சித்தன்கேணி.

A.E. ஜெபர்சன்
ஆசிரியர்
புகழ் கல்வி நிறுவனம்
தாவடி வீதி
மானிப்பாய்.

# கிறிஸ்தவம்

## வினாவிடைப் பூங்கா

- திருவிவிலியம்
- பழைய ஏற்பாடு
- புதிய ஏற்பாடு
- திருச்சபையும் இலங்கைத் திருச்சபையும்
- வழிபாடும் மறைக் கோட்பாடுகளும்.

(தரம் 5 –12 வரையான மாணவர்களுக்கு உகந்தது)
புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது

தொகுப்பு:- இரா.ரமணன் B.A.(Cey)
ஆசிரியர்,
புனித பத்திரிசியார் கல்லூரி,

குறிப்பு: திருவிவிலிய பொது மொழிபெயர்ப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது

**1000 வினாவிடைகளைக் கொண்டது.**

# யாழ் மறைக்கல்வி நடுநிலைய
# இயக்குனரின் ஆசியுரை

கேள்வி-பதில் மூலம் புரியாத விடயங்களை புரிய வைப்பது மிகவும் இலகுவானது. கத்தோலிக்க திருச்சபையானது கிறிஸ்தவத்தின் மறையுண்மைகளை புரியவைப்பதற்கு இம் முறையை கையாண்டு வந்துள்ளது.

இந்நூலின் ஆசிரியரான இரா.ரமணன் காலத்தின் தேவையை உள்வாங்கி கேள்வி-பதில் முறையில் மாணவர்களின் கேள்விகளிற்கு விடையளிக்கின்றார். இவரது இந்தத் தேடலானது மறைநூலோடு மட்டும் நின்றுவிடாது மறைக் கொள்கை, வழிபாடு, அகில இலங்கைத் திருச்சபையென்று பரவி நிற்கின்றது.

மறைக்கல்வியின் நோக்கமானது கிறிஸ்துவின் மறைபொருளை அறிவது மட்டுமல்ல அத்தோடு கிறிஸ்துவால் ஆட்கொள்ளப்பட்ட புதிய படைப்பாக ஆக்கப்படுவதாகும். மாணவச் செல்வங்களே இந்த அறிதல் மூலம் இறைவனின் அன்பை ஆழப்படுத்தி கிறிஸ்துவை ஆதாரமாக்குங்கள்.

திருச்சபையோடு இணைந்து இவர் படைத்த இந்த படைப்பைப் பாராட்டுகிறேன். தொடர்ந்தும் இவரது தேடல் தொடர வேண்டும். மாணவச் செல்வங்கள் இவரது படைப்பால் நலன் பெற வேண்டுமென வாழ்த்தி ஆசிக்கின்றேன்.

அருட்பணி ஜோண் மவுலிஸ்
இயக்குனர்,
யா/மறைக்கல்வி
நடுநிலையம்

## ாகாணத் தலைவரின் அணிந்துரை.

் சின்னப்பரது " ஆசியாவில் திருச்சபை"
ரயில் ஆசியாக்கண்டத்தில் மக்கள்
சன்னம் கல்வித்துறையில் அதனது
காணக்கூடியதாக உள்ளது என்கின்றார்.
பாடசாலைச் சுவர்களுக்குள் மட்டும்
ணந்த வளர்ச்சிக்கு அவை துணைபோக

பூர்த்திசெய்யும் விதத்தில் இந்நூலின்
ள் திருமறைக் கல்வியை மாணவர்கள்
ஆழ்ந்து பதியும் வண்ணமும் "கிறிஸ்தவ
ம் நூலை வடித்துள்ளார். ஆயிரம்
ரியம், தாய்த்திருச்சபையினதும்,
வழிபாடும் மறைக்கோட்பாடுகளும் எனும்
ர்கள் மனதில் மறையறிவூட்டி சிறப்பான
றயினருக்கு பணியாற்றுகிறார். இந்நூலை
ீதியாக வளர்ச்சியடைவது மட்டுமல்லாது
றுவார்கள் என நம்புகிறேன்.

மது இளமையில் ஆற்றல்களையும்
ரயோகம் செய்து எமது சமூகத்தை
ரமணன் அவர்கள் தமது ஆற்றல்களை
மட்டுமல்லாமல் தமது ஆசிரியத்துவ
ம் கடந்து விரிவுபடுத்தி ஆக்கபூர்வமான
கத்தக்க ஒன்றே. இவர் தனது மேலதிக
டு இந்நூலின் ஊடாக மறைப்பணியில்
மக்களுக்கும், குறிப்பாக
இவர் ஆற்றும் பணி உண்மையில்

மாணவ ஆசிரிய கரங்களில் தவழவும்
வளர்ச்சி இளைய தலைமுறையினரில்
நிற்கிறேன்.

அருட்தந்தை. அ. ஜீவேந்திரா போல்
மாகாணத் தலைவர்
அமல மரித்தியாகிகள் சபை
யாழ்ப்பாணம்.

# நூன்முகம்.

## "தாயே தமிழே வணக்கம்."

கிறிஸ்தவ வினாவிடைப் புதையலை ஆக்கிய நான் மீண்டும் கிறிஸ்தவ வினாவிடைப் பூங்காவினூடாக உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.ஒரு பூங்காவில் பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்குவது போல் இதில் திருவிலிலியம், தொடக்க நூல், விடுதலைப் பயணம், அரசர்களும் நீதித் தலைவர்களும், நான்கு நற்செய்திகள், திருத்தூதர் பணிகள், நிருபங்களும் திருவெளிப்பாடும் திருச்சபையும் இலங்கைத் திருச் சபையும், வழிபாடும் மறைக்கோட்பாடுகளும் என உப தலைப்புக்கள் இட்டு பூங்காவை அலங்கரித்துள்ளேன். இப் பூங்காவானது முழுவதும் எனக்கே சொந்தமானது என்று கூறும் பாசாங்குத் தனம் என்னிடமில்லை. பல்வேறு புத்தகங்களை ஆராய்ந்து மாணவர்களுக்கு பயன்படக் கூடிய வகையில் இப் பூங்காவை அலங்கரித்துள்ளேன்.இவ் வினாவிடைப் பூங்காவானது எனது அறிவுக்கு எட்டிய வகையில் விளைந்த அறுவடை ஆதலால் தவறுகள காணப்படின் ஆதாரத்துடன் சுட்டிக் காட்டினால் மறுபதிப்பில் நன்றியுடன் நினைவு கூர்ந்து வெளிப்படுத்துவேன்.

புதையலுக்கு கொடுத்த ஆதரவை கல்விச் சமுகத்திடமிருந்து பூங்காவிற்கும் எதிர் பார்த்து நிற்கின்றேன்.இப் பூங்காவில் தரம் 5 தொடக்கம் உயர்தரம் வரையான மாணவர்களுக்கு பயன்படக் கூடிய ஆயிரம் வினாவிடைகள்